
# செம்மணி

நிலம் 2 துகள் 84 வள்ளுவர் ஆண்டு 2052, 26 மாசி - 04 பங்குனி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-








## காணாமற்போனவர்களுக்கு நடந்தது என்ன? உடன் தெரிவியுங்கள்

### இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து

இலங்கையில் போரின்போது பலவந்தமாகக் காணாமலாக் கப்பட்டவர்களின் உறவினர் களது துன்ப துயரங்களை உணர்ந்து காணாமற்போனவர்க ளுக்கு என்ன ஆனது, அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பவற் றைத் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். இழப்பீடுகளை வழங்கவேண்டும். குற்றவாளி களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு கொழும்பு ஆட்சி யாளர்களிடம் வலியுறுத்தியிருக் கிறார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் மிச்சேல் பச்லெட்.

இலங்கையின் மனித உரி மைகள் நிலவரம் தொடர்பான தனது அறிக்கையில் அவர் இத னைத் தெரிவித்திருக்கிறார். நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சில முன்னேற்றகரமான நகர்வு களை அங்கீகரிப்பதாகத் தெரி வித்துள்ள அந்த அறிக்கை அதே நேரம், நாட்டில் தொடரும் மனித உரிமைகளின் நிலவரம் தொடர்பில் கரிசனைகளையும் எழுப்பியுள்ளது.

அறிக்கை தயாரிப்பது உட் பட தமது அலுவலகத்துடன் சேர்ந்தியங்குவதற்கான விருப் பத்தை

பக்கம் 02

## ரூபவாகினியில் தமிழ் நீக்கம்

இலங்கையின் அரச தொலைக்காட்சி சேவை யான ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் இலச்சி னையில் இருந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழி கள் நீக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப் படுகின்றது.

40 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபவாகினி இலச்சினையில் மும்மொழிகளும் இடம்பெற்றி ருந்தன. எனினும் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக சோனல குணவர்த்தன நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து இலச்சினையில் இருந்த தமிழ், ஆங்கில மொழிகள் நீக்கப்பட்டு தனிச் சிங் களம் மட்டும் இடம்பெற்றுள்ளது என்று கூறப் படுகின்றது.

மாசி மாதம் 22ஆம் நாள் முதல் இந்தப் புதிய இலச்சினை பயன்பாட்டுக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் இலங்கையில் மும்மொழிக் கொள்கை நடை முறையில் இருக்கும் நிலையில் அரச தொலைக் காட்சியின் இலச்சினையில் இருந்து தமிழ், ஆங் கிலம் நீக்கப்பட்டிருப்பது மிக மோசமான செயல் என்று கண்டித்துள்ளனர்.

## சனி, ஞாயிறு இரவுகளில் மின் வெட்டு கிடையாது

கடந்த வாரம் முழுவதும் தொடர்ச்சியாகப் பல மணி நேர மின்வெட்டை நடை முறைப்படுத்தி வந்த இல ங்கை மின்சார சபை வார இறுதி நாட்களான சனி மற் றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மின் வெட்டை நடைமுறைப் படுத்துவதில்லை என்று தீர் மானித்துள்ளது.

பொதுப்பயன்பாட்டுஆணைக் குழு வழங்கிய ஆலோச னைக்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட் டது. கடந்த வாரம் நாள் ஒன் றுக்கு நான்கு மணி நேரத்திற் கும் அதிகமாக மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பகலில் இரண்டு மணி நேர மும் இரவில் இரண்டரை மணி நேரமுமாக இந்த மின்வெட்டு இருந்தது.

இருப்பி

பக்கம் 02

## ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இழக்கோம் இலங்கை நம்பிக்கை

ஐரோப்பிய ஒன்றத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை உடனடியாக நிறுத்தப்படாது என்று கொழும்பில் ஆட்சியா ளர் தரப்பில் நம்பிக்கை தெரி விக்கப்பட்டுள்ளது. இலங்கை யின் மனித உரிமைகள் நில வரம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் சில கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தபோதும் அது உடனடியாக வரிச்சலு கையை மீளப் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அயலுறவுத்துறை அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம் பகே தெரி

பக்கம் 02



நீர்கொழும்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி கையெழுத்துப் பெறும் போராட்டத்தில் சிங்கள மக்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

## முகக்கவசம் இல்லாதோருக்கு பிசிஆர் சோதனை



நல்லூர் பிரதேச செயலக மும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார பிரிவி னரும் இணைந்து நல்லூர் பிர தேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் அநா வசியமாக நிற்போரிடமும் முகக்கவசமின்றி பயணிப் போரிடமும் பிசிஆர் பரிசோ தனைகளை முன்னெடுத்தன. இதன்

பக்கம் 02

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க சிங்கள மக்களும் ஆதரவு கையொப்பம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்திக் கையெழுத் துப் பெறும் போராட்டத்தில் சிங்கள மக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு பேருந்து நிலையத்திற்கு முன்பாக தமிழ் அரசுக் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையெ ழுத்துச் சேகரிப்புப் போராட்டத்தில் சிங் கள மக்களும் அதிகளவில் கலந்து கொண்டனர்..

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி இந்தக் கையெழுத்து போராட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிக ளில் இதற்குப் பேராதரவு கிடைத் திருந்தது.

வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு பேருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந் திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகி யோரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் சிங்கள மக்கள் அதிகள வில் ஒன்றுகூடி பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தும் கையொப்பமிட்டிருந் தனர்.

பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# போர் வேண்டாம்!

போர் எங்கு நிகழ்ந்தாலும் அது அழிவுகளையும் இழப்புக்களையும் துயரங்களையுமே ஏற்படுத்தும். இலங்கையில் போரால் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்த ஓரினம் என்கிற வகையில் தமிழர்கள் ஒருபோதும் போரை ஆதரிக்கவே முடியாது. அது எங்கு நடந்தாலும் போரை எதிர்த்துக் குரல் கொடுப்பது தமிழர் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகின்றது.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரும் பொது மக்களுக்குப் பாதிப்பையும் இழப்புக்களையும் அழிவுகளையும் மட்டுமே மிச்சம் விட்டுச் செல்லப் போகிறது. அரசியல் அதிகார வர்க்கம் போர் அழிவுகளைத் தமது அதிகார நிலைநாட்டுதலுக்கான வழியாகப் பயன்படுத்தும் கேவலமான முறைமை இன்னும் ஒழிக்கப்படாமல் இருப்பது கவலைக்குரியது.

உக்ரைன் தலைநகர் கீவ்வை அடைந்துள்ள சண்டைகளில் முதல் சில நாட்களிலேயே பல நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று செய்திகள் வந்திருக்கின்றன. படைத்துறைத் தளபாடங்களுக்கும் சொத்துக்களுக்கும் பலத்த சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உயிரிழந்தவர்களில் பொதுமக்களும் கணிசமான அளவு இருக்கின்றனர் என்பது துயரம் தரும் செய்தி.

தனது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு என்கிற பெயரில் ரஷ்யா முன்னெடுத்துள்ள இந்தப் போர் அப்பாவிகள் பலரது உயிர்களையும் காவு கொண்டிருக்கின்றது என்பது பற்றி இந்த உலகம் அக்கறைகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. போரை நிறுத்துவதற்கான அதன் முனைப்பு மிகவும் மந்தமானதாகவே இருக்கின்றது இது ஏற்புடையதல்ல.

பல நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களைப் பணயம் வைத்து இலங்கையில் நடந்த இறுதிப்போரின் போதும் உலக நாடுகள் இவ்வாறே வேடிக்கை பார்த்து நின்றன. உக்ரேனிய மக்கள் அவலக் குரலும் அவ்வாறே இன்று காற்றில் கரைந்து போகின்றது. ஆயுதங்கள் மூலம் தமது பலத்தை நிரூபித்தும் உயிர்களைப் பறிப்பதன் மூலம் வெற்றியை நிலைநாட்டியும் ஆடப்படும் இந்த அரசியல் சதுரங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் விரை போர்களுக்கு ஓய்வு இருக்கப்போவதில்லை என்பதையே உக்ரைன் போர் எடுத்துக்காட்டுகின்றது.

இந்தப் போருக்கா ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளன. தத்தமது வங்களில் உள்ள ரஷ்ய நாட்டவர்களின் பணம் மற்றும் சொத்துக்களை முடக்கியுள்ளன. போரை நிறுத்த இந்த நடவடிக்கைகள் மட்டுமே போதுமானவையல்ல என்பது நிரூபணமாகியிருக்கிறது. உலகம் வேகமாகவும் விவேகமாகவும் செயற்பட்டு இந்தப் போரை உடனடியாக நிறுத்தி உயிரிழப்புக்களை குறைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

அதற்கு ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்கள் இன்னும் காத்திரமாகச் செயற்பட்டாக வேண்டும். பெரும் போர்களைத் தடுக்கும் அமைப்பாக மட்டுமன்றி அனைத்துப் போர்களையும் தடுத்து நிறுத்தும் சக்திவாய்ந்த அமைப்பாக ஐ.நா. கட்டியெழுப்பப்படவேண்டும். அப்போதுதான் உலகில் அமைதி நிலவும். வெறும் அறிக்கைவிடும் அமைப்பாக அன்றி உலக அமைதியின் பாதுகாவலனாக ஐ.நா. மாற்றியமைக்கப்படவேண்டும்.

## காணாமற்...

ஆட்சியாளர்கள் வெளியிட்டிருப்பதை அங்கீகரிப்பதாக அறிக்கை கூறுகின்றது. அதே நேரம் பன்னாட்டு மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றும் விதத்தில் பாதுகாப்புத்துறை, நீதி மற்றும் நிறுவனமயப்பட்ட மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த கால மனித உரிமைகள் மீறல்களுக்கான பொறுப்புக் கூறல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பது ஆகிய விடயங்களில் கடந்த ஆண்டு பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது என்று கூறும் அந்த அறிக்கையில் அதிகம் பெண்களையே கொண்டிருக்கும் காணாமற் போனவர்களின் உறவினர்களது நிலமை குறித்து தனியான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

படைத்துறை மயமாக்கல் மற்றும் இன, மத தேசியவாதம் என்பன ஜனநாயக நிறுவனங்களைச் சிறுமைப்படுத்துகின்றமை, சிறுபான்மை இனத்தவர்களின் மத்தியில் கவலைகள் அதிகரித்திருக்கின்றமை நல்லிணக்கத்துக்கான முட்டுக்கட்டைகள் தொடர்பிலும் அறிக்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்கள், மனித உரிமைகளின் காவலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் படைத் துறையினரால் கண்காணிப்புக்குள்ளாக்கப்படுவது மற்றும் துன்புறுத்தப்படுவது தொடர்பாகக் கடந்த அறிக்கையில் ஆணையாளர் தெரிவித்திருந்த கருத்துக்கள் இந்த அறிக்கையிலும் தொடர்கின்றன. அதிலும் குறிப்பாக இந்தச் சம்பவங்கள் நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிகழ்வதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீதான திருத்த வரைபின் சில பகுதிகள் முக்கியமான முதற் படி என்று தெரிவித்துள்ள ஆணையாளர், இருப்பினும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள மற்றைய திருத்தங்கள் பன்னாட்டு மனித உரிமைகள் விழுமியங்களோடு பொருந்திருப் போகவில்லை என்றும் அறிக்கை கூறுகின்றது.

## ஜி.எஸ்.பி. பிளஸ்...

வித்தார்.ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையில் இருந்து ஏற்று மதி செய்யப்படும் பொருட்க ளுக்கு வரி விலக்கு வழங்கும் சலுகை இந்த ஜி.எஸ்.பி. பிளஸ் மூலம் கிடைக்கின்றது. இலங்கையில் மனித உரிமைகளின் நிலமைகள் முன்னேற் றம் அடையும் என்கிற வாக்கு றுதிகளின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டு இந்த வரிச்சலுகை இலங்கைக்கு மீள வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2019இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மனித உரிமைகள் நிலமை மோச மாகத் தொடங்கியிருக்கிறது.

இந்த நிலையிலேயே இலங்கை ஆட்சியாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாமலாக்கவேண் டும் என்பது உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைக் கரிசனைகளை ஐரோப்பிய ஒன் றியம் வெளிப்படுத்தியிருந்தது. மோசமான மனித உரிமைகள் நிலமை காரணமாக 2010ஆம் ஆண்டில் இந்த வரிச்சலு கையை இலங்கை இழந்திருந்தது.

ராஜபக்சக்களின் ஆட்சி மீளவும் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து அதிகரித்து வந்த மனித உரிமைகள் மீறல்கள் காரணமாக ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் மீளப்பெறக்கூடும் என்கிற எதிர்பார்ப்பு அதிகம் இருந்தது. ஆனால், "ஐரோப்பிய ஒன்றியம் எழுப்பிய கேள்விகளுக்கு நம்பகத்தன்மையோடும் உண்மையாகவும் நாம் பதிலளித்திருப்பதால் வரிச்சலுகை மீளப் பெறப்படாது என்று உறுதியான நம்பிக்கையோடு இருக்கின்றோம்" என்றார் அயலுறவுத்துறை அமைச்சுச் செயலர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு திங்கட்கிழமை தொடங்க இருக்கும் நிலையில் அங்கு புறப்படுவதற்கு முன்னதாக கொலம்பகே கொழும்பில் இதனைத் தெரிவித்தார். "ஒன்றியத்தின் முக்கியமான கரிசனைகளில் ஒன்றாக இருந்தது பயங்கரவாதத் தடைச் சட்டம். அது இப்போது திருத்தப்பட்டு நாடாளுமன்றத்தின் முன்பாக வைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் அது சட்டமாக்கப்படும். அது நாம் மேற்கொண்ட சாதகமானதொரு நடவடிக்கை" என்றார் அவர்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை இழப்பதென்பது மிகப் பெரும் பெருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

## முகக்கவசம்...

போது முதியவர்கள் உட்பட பலரிடம் குறித்த பரிசோதனை மாதிரி பெறப்பட்டது. கொரோனாவின் மற்றொரு திரிபான ஓமிக்ரோன் பரவல் அதிகரித்து வரும் நிலையில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளில் அலட்சியம் காட்டவேண்டாம் என்று சுகாதாரத் துறையினர் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

எனினும் அண்மையில் வெளியான நடிகர் அஜித்தின் வலிமை திரைப்பட வெளியீட்டிற்குக் கூட்டம் அலைமோதியதுடன் ரிக்கெட் பெறுமிடத்தில் கூட்ட நெரிசலும் காணப்பட்டது. எனினும் அவர்களிடம் பி.சி.ஆர் சோதனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## சனி, ஞாயிறு...

னும் சனி, ஞாயிறு தினங்களில் பகலில் மட்டும் மூன்று மணி நேர மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக்க ரத்நாயக்கே தெரிவித்தார். அதுவும் ஏ, பி, சி ஆகிய பகுதிகளிலேயே 3 மணி நேர மின்வெட்டு இருக்கும் ஏனைய பகுதிகளில் பகல் நேரத்தில் இரண்டரை மணி நேர மின்வெட்டே நடைமுறைப்படுத்தப்படும்.

ஞாயிற்றுக்கிழமை ஏ, பி, சி பகுதிகளில் பகல் நேரத்தில் இரண்டரை மணி நேர மின்வெட்டு இருக்கும். ஏனைய பகுதிகளில் மின்வெட்டு முற்றாக நீக்கப்பட்டிருக்கும்.


இலங்கையில் நிலவும் டொலர் நெருக்கடி காரணமாக பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு முடியாதிருப்பதும் நீர்மின் உற்பத்திக்கான தேக்கங்களில் தண்ணீர் கொள்ளளவு வெகுவாகக் குறைந்திருப்பதும் நாட்டில் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றது.

பெற்றோலியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை அடுத்து நாளாந்தம் ஒரு மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த மின்சார சபை திட்டமிட்டபோதும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. அப்போதே, மாசி மாத இறுதியிலிருந்து சித்திரை மாதம் வரைக்கும் கடுமையான மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று நிபுணர்கள் எச்சரித்திருந்தனர்.

## பயங்கரவாதத்...

'இன்றைய நாள் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியான நாள். காரணம் சிங்கள மக்களும் அதிகளவில் ஒன்று கூடி பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி கையொப்பமிட்டுள்ளனர்' எனத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உக்ரைன் போர் உலகையே உலுக்கும்!

ராஜமௌலி

போர் தொடுப்பது எனது நோக்கமல்ல என்று சொல்லிச் சொல்லியே ஒரே நாளில் உக்ரைனில் தீவிர படை நடவடிக்கையைத் தொடங்கிவிட்டது ரஷ்யா. அந்த நாட்டு அதிபர் விளாடிமிர் புடின் போருக்காகத் தெரிவித்த காரணத்தைத் தாண்டி தற்போதைய படை நடவடிக்கை தொடரும் என்பதே அரசியல் நோக்கர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ரஷ்யப் படைகள் உக்ரைன் தலைநகர் கீவ்வை நோக்கி முன்னேறி வருகின்றன. அதேநேரம் உக்ரைனைக் கைப்பற்றுவது தமது நோக்கமல்ல என்றும் அங்கு அமைதி நிலவுவதையே ரஷ்யா விரும்புகின்றது என்றும் அதிபர் புடின் தெரிவித்திருக்கிறார். எனவே உக்ரைனின் தற்போதைய அதிபரை தனது படை நடவடிக்கை மூலம் பதவியில் இருந்து அகற்றிவிட்டு தனக்குச் சார்பான ஒருவரைப் பதவியில் அமர்த்துவதே ரஷ்ய அதிபரின் போர் நடவடிக்கையின் நோக்கம் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

அதேசமயம் இந்த விடயம் ரஷ்யா நினைத்தபடிதான் நகருமா என்பது இந்தப் போர் தொடர்பில் நேட்டோ எடுக்கப்போகும் பதில் நடவடிக்கையில்தான் தங்கியிருக்கிறது. உக்ரைன் நேட்டோவின் நேரடி அங்கத்துவ நாடல்ல. அதனால் ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு



உக்ரைன் எல்லைகளையொட்டியுள்ள நேட்டோப் படைகள் பதில் தாக்குதல்கள் எதனையும் நடத்தவில்லை. எனினும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகள் பலவும் இந்தப் போருக்காக ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதிலேயே இதுவரை கவனத்தைச் செலுத்தி வருகின்றன. அவற்றிடமிருந்து நேரடியான பதில் தாக்குதல்களுக்கான அறிகுறிகள் எவையும் இல்லை.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பதற்றம் பல வாரங்களாக நீடித்து வந்தபோதும் நேட்டோவும் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இப்படியேதான் இருந்தன. போர் வந்தால் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் வரும் என்றே எச்சரித்து வந்தன. மற்றொரு பக்கத்தில் போரை நிறுத்தும் ராஜதந்திர முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இப்போது ஒரே நாளில் உக்ரைன் மீது ரஷ்யா சரமாரியாகத் தாக்குதல் நடத்திவரும் நிலையில், ரஷ்ய படைகள் முன்னேறும் வேகத்தைப் பார்க்கும்போது, உலக அளவில் பெரும் பதற்றமும் கவலையும் அதிகரித்துள்ளது. தாக்குதல்கள் தொடங்கிய முதல் நாளிலேயே உக்ரைனின் 11 விமானப் படைத் தளங்கள் உள்ளிட்ட 70 படைத் தளங்களை ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டதாக கூறுகிறது ரஷ்யா.

**உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்த மாத்திரத்தில் பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை பரலுக்கு 100 டொலராக உயர்ந்துள்ளது. இது 115 டொலர் வரை உயரலாம் எனக் கணிக்கப்படுகிறது. கொரோனாவுக்குப் பின்னர் கச்சா எண்ணெய் விலையேற்றம் செய்யாமல் காத்திருந்த சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் இதைப் பயன்படுத்தி விலையேற்றுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். அதேபோல் தங்கத்தின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது.**

பின்னணி: உக்ரைன் மீதான ரஷ்ய அதிருப்தி இன்று, நேற்று தோன்றியது அல்ல. 2014ஆம் ஆண்டு உக்ரைனில் நடைபெற்று வந்த ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதனால் ரஷ்ய ஆதரவு பெற்ற அதிபர் விக்டர் யானுகோவிச் பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரைன் போர் ...

யில் இருந்து தூக்கி எறியப்பட்டார். இதனையடுத்து உக்ரைனை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர ரஷ்யா முயன்று வருகிறது. அதன் நீட்சிதான் இப்போது ஏற்பட்டுள்ள மோதல்.

கடந்த கார்த்திகை மாதம் தொடங்கி பல வாரங்களாகவே பதற்றம் நிறைந்து காணப்பட்ட நிலையில் தற்போது தாக்குதல் தீவிரமாகத் தொடங்கியிருக்கிறது. இலங்கை நேரப்படி காலை 8.30 மணியளவில் ரஷ்ய அதிபர் புடின் உக்ரைனுக்கு எதிரான படை நடவடிக்கையை அறிவித்தார்.

**புடினின் உக்கிரமான பேச்சு:** போர் என்று பிரகடனப்படுத்தாமல் மிகவும் நேர்த்தியாக வார்த்தைகளைக் கையாண்டு படை நடவடிக்கைக்கு உத்தரவிடுவதாகப் பேசிய புடின், "உக்ரைன் மீது படை நடவடிக்கைக்கு உத்தரவிடுகிறேன். இதன் நோக்கம், கடந்த 8 ஆண்டுகளாக உக்ரைன் ஆட்சியாளர்களால் சில மக்கள் இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். அவர்களின் துயரத்துக்கு முடிவு காண தாக்குதலுக்கு உத்தரவிடுகிறேன். உக்ரைனில் இருந்து நேட்டோ ஆதாரவுப் படைகள் பின்வாங்க வேண்டும். உக்ரைன் நாஜிக்களின் கூடாரமாகியுள்ளது. உக்ரைன் வீரர்களே உங்களின் ஆயுதங்களை கீழே போடுங்கள்.

ரஷ்யா, உக்ரைன் விவகாரத்தில் யாராவது தலையிட நினைத்தாலோ, எங்கள் மக்களுக்கு அச்சுறுத்தலாக மாறினாலோ, நாங்கள் உடனடியாக தகுந்த பதிலடி கொடுப்போம். அதன் விளைவுகள் வரலாறு இதுவரை சந்தித்திராததாக இருக்கும்.

உக்ரைனை ஆக்கிரமிப்பது எங்கள் நோக்கம் அல்ல. நாங்கள் உக்ரைனை ஆக்கிரமிக்க மாட்டோம். உக்ரைனில் அமைதி நிலவ வேண்டும் என்றே விரும்புகிறோம்" என்று கூறியுள்ளார்.

வரலாறு காணாத விளைவு என்ற ரஷ்ய அதிபரின் எச்சரிக்கையை அமெரிக்கா உள்ளிட்ட அதன் சார்பு நாடுகளும் நேட்டோ படைகளும் மிகவும் கூர்ந்து கவனித்து வருகின்றன.

என்ன சொல்கின்றன உலக நாடுகள்? இதற்கிடையில், "உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலால் மிகப்பெரியளவில் உயிரிழப்பு ஏற்படும். இதற்கு புடினே பொறுப்பேறக வேண்டியிருக்கும்" என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கண்டனம் தெரிவித்தார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், "ரஷ்ய அதிபர் குருதிச் சகதிப் பாதையை, அழிவுப் பாதையைத் தேர்வு செய்துள்ளார். பிரிட்டன் தகுந்த பதிலடி கொடுக்கும்" என்று கூறியுள்ளார். அமெரிக்கா, ரஷ்ய அதிபர்கள் சந்திப்புக்கு முயன்று வந்த பிரான்ஸ் அதிபர் இமானுவே மேக்ரோன், "போரை முடிவுக்குக் கொண்டு வர பேசி வருகிறோம். உக்ரைனுக்கு தோள் கொடுப்போம்" என்று கூறியுள்ளார். இத்தாலி பிரதமர் மரியோ ட்ராகி, "ரஷ்ய நடவடிக்கை எந்த வகையிலும் நியாயமானது இல்லை" என்று கூறியுள்ளார். ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, "ரஷ்ய செயல்பாடு சர்வதேச அமைதியைக் குலைக்கும்" என்று கூறியுள்ளார்.

இப்படிசி சில நாடுகள் தங்களின் கண்டனங்களை மேலோட்டமாகப் பதிவுசெய்ய, மற்ற ஐரோப்பிய நாடுகள் மௌனம் காக்கின்றன. ரஷ்யாவின் இயற்கை எரிவாயு தயாரிப்புச் சந்தையை ஐரோப்பிய நாடுகள் சார்ந்துள்ளன. இந்நாடுகளின் 65% எரிவாயு தேவை ரஷ்யாதான் குழாய் மூலம் பூர்த்தி செய்கிறது. இதனாலேயே ஐரோப்பிய நாடுகள் பலவும் அமைதி காப்பதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

பயனற்ற இந்திய தலையீடு: இந்தப் போரை நிறுத்த இந்தியா தலையிடவேண்டும் என்று உக்ரைன் தரப்பிலிருந்து ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. போரை நிறுத்த "ரஷ்யாவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். அதனை நிச்சயமாக ரஷ்யா ஏற்கும்" என்று உக்ரைன் தூதர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் ஐகர் பொலிகா, "நான் எனது மாணவப் பருவத்திலிருந்து இந்திய வரலாறு பற்றியும் அதன் ராஜதந்திரங்கள் பற்றியும் அறிவேன். உங்கள் நாட்டில் தான் சாணக்கியர் இருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பாவின் பெரும்பான்மையான பகுதிகளில் நாகரிகமே வளரவில்லை. மகாபாரதம் தந்த நாடு உங்களுடையது.

மகாபாரதத்தில் போர் வருவதற்கு முன்னரே அதனைத் தடுக்கும் உத்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும், இந்தியா பஞ்சீல கொள்கையை வகுத்த தேசம். அதனால் தான் இந்தியாவிடம் உதவிக்காக வேண்டி நிற்கிறோம். இந்தியா, ரஷ்யா இடையே நல்லுறவு இருக்கிறது. தலைமை அமைச்சர் மோடி சொன்னால் நிச்சயம் புடின் செவிசாய்ப்பார்" என்று கூறியுள்ளார்.

மோடியும் அதிபர் புடினுடன் மெய்நிகர் வழியாகப் பேசினார். எனினும் அதன் பின்னரும் ரஷ்யப் படைகள் தாக்குதல்களை நிறுத்தவில்லை. பதிலாகத் தொடர்ந்தும் தலைநகர் கீவ் நோக்கி முன்னேறி வருகின்றன.



**ஒரே நாளில் உக்கிரம்:** இலங்கை நேரப்பட்டி காலை 8.30 மணியளவில் ரஷ்ய அதிபர் புடின் உக்ரைனுக்கு எதிரான படை நடவடிக்கையை அறிவித்தார். அடுத்த சில மணி நேரத்திலேயே தனது படைகள் உக்ரைனின் விமானப்படை கட்டமைப்பை முற்றிலுமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகக் ரஷ்யா கூறியுள்ளது. பொதுமக்கள் எங்கள் குறி அல்ல என்று ரஷ்யா கூறினாலும் கூட, ரஷ்ய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், படையினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனவும் முதற்கட்ட தகவலில் உக்ரைன் கூறியுள்ளது. அதே வேளையில், உக்ரைனுக்குள் முன்னேறி செல்லச் செல்ல உக்ரைன் படைகள் தங்களிடம் சரணடைந்து வருகின்றன என ரஷ்யா தெரிவித்துள்ளது.

டான்ஸ்க், லாஹன்ஸ்க்குடன் முடிந்துவிடுமா? அண்மையில் உக்ரைனின் 2 மாகாணங்களை தனி நாடுகளாக ரஷ்யா அங்கீகரித்தது. உக்ரைனில் 24 மாகாணங்கள் உள்ளன. இதில் ரஷ்ய எல்லையில் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள டான்ஸ்க், லாஹன்ஸ்க் மாகாணங்களில் ரஷ்ய வம்சாவளியினர் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். அந்த மாகாணங்களை சேர்ந்த கிளர்ச்சிக் குழுக்கள், உக்ரைன் அர சுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றன. இதற்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகிறது.

இந்நிலையில், ரஷ்ய அதிபர் புடின் மற்றும் டான்ஸ்க், லாஹன்ஸ்க் பகுதிகளின் தலைவர்கள் இடையே இப்போது ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதன்படி இரு பகுதிகளையும் தனி நாடுகளாக ரஷ்யா அங்கீகரித்தது. இப்போது கிளர்ச்சியாளர்கள் டான்ஸ்க், லாஹன்ஸ்க் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக வந்துவிட்டது என கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். ஆனால், ரஷ்ய அதிபர் இன அழிப்புக்கு எதிராக போராடுகிறோம் என்று கூறியதுபோல் இந்த இரண்டு மாகாணங்களுடன் ரஷ்ய தாக்குதல் முடிந்துவிடும் போன்று தெரியவில்லை. அது தொடர்கிறது.

போர் தொடங்கி இரண்டாவது நாள் வரை உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்த நேட்டோ படைகள் தயார் நிலையில் மட்டுமே இருக்கின்றன. ரஷ்ய படைகள் முன்னேறிச் செல்ல என்ன மாதிரியான எதிர்வினை வரும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**முத்தரப்புத் தாக்குதல்:** ரஷ்யா ஏற்கெனவே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த க்ரீமியா மாகாணம் வழியாக தனது படைகளை உக்ரைனுக்குள் அனுப்பியுள்ளது. உக்ரைன் மீது கிழக்கு, வடக்கு, தெற்கு என்று மூன்று வழிகளிலும் ரஷ்யா தாக்குதல் நடத்துகிறது. அடுத்ததாக துறைமுகத்தையும் ரஷ்ய படைகள் குறிவைத்துள்ள நிலையில் அண்டை நாடான மால்டோவா, உக்ரைனில் இருந்து வருவோருக்கு தஞ்சம் அழிப்போம் என்று அறிவித்துள்ளது.




**உலகம் முழுவதும் பாதிப்பு:** இந்தப் போரால் அந்த இரு நாடுகளும் மட்டுமல்ல உலகமே பாதிக்கப் படப்போகிறது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்த மாத்திரத்தில் பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை பரலுக்கு 100 டொலராக உயர்ந்துள்ளது. இது 115 டொலர் வரை உயரலாம் எனக் கணிக்கப்படுகிறது. கொரோனாவுக்குப் பின்னர் கச்சா எண்ணெய் விலையேற்றம் செய்யாமல் காத்திருந்த சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் இதைப் பயன்படுத்தி விலையேற்றுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். அதேபோல் தங்கத்தின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது.

இதுவும் தங்கநகை முதலீட்டாளர்கள் தோதாகப் பயன்படுத்திக் கொண்ட தருணம் என்றே நிபுணர்கள் கூறுகின்றனர். தங்கம் விலையுயர்வு இனி பெரியளவில் சரிய வாய்ப்பில்லை என்றும் சந்தை நிபுணர்கள் கணிக்கின்றனர். அடுத்ததாக சூரிய காந்தி விதைகளில் தயாராகும் சமையல் எண்ணெய்யும் விலை உயரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா, உக்ரைன் மோதல் உலகளவில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் உக்ரைன், ரஷ்யா மட்டுமல்ல ஒட்டுமொத்த ஐரோப்பாவும் இருண்ட நாட்களை எதிர்நோக்கியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் கன்று பயமறியாது




# கார்ல்சனை வென்ற பிரக்ஞானந்தா!

"கார்ல்சனை நேருக்கு நேர் மேசையில் சந்தித்து வெல்லவேண்டும்" என்று எந்த ஆர்ப்பாட்டமோ ஆரவாரமோ இன்றி மிக அமைதியாகக் கருத்துக்கூறுகிறார் பிரக்ஞானந்தா. இப்போதுதான் மெய்நிகர் (ஒன்லைன்) செஸ் விளையாட்டில் உலக சம்பியன் கார்ல்சனை வீழ்த்தி வெற்றிவாகை சூடியிருக்கிறார்.

உலக சாம்பியனை வீழ்த்திவிட்டோம் என்கிற பெருமிதமோ கொண்டாட்டமோ கொள்ளாமல் சலனமே இன்றி 'நான் தூங்குவதற்கான நேரம் வந்துவிட்டது' எனக் கூறி விடைபெற்றார் அன்றைய தினமே, 16 வயதே ஆகும் இளம் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா.

வயதுக்கு மீறிய பக்குவத்தோடு அவர் தனது வெற்றியைக் கொண்டாடாமல் இருக்கலாம். ஆனால், தமிழ்நாடும் தமிழர்களும் கொண்டாடுகிறார்கள். கொஞ்சம் கொஞ்சம் இந்தியாவும் கொண்டாடப் பார்க்கிறது. ஏனெனில், இந்திய சதுரங்கத்துக்கு மாபெரும் பெரு



மையளிக்கக்கூடிய வகையில் உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்தியிருக்கிறார்.

இளம் கிராண்ட்மாஸ்டரான பிரக்ஞானந்தாவைப் பற்றிப் பேசுவதற்கு முன்பாக அவர் தோற்கடித்த மேக்னஸ் கார்ல்சனை பற்றிப் பேசியாக வேண்டும். அப்போதுதான், பிரக்ஞானந்தாவின் வெற்றியின் வீரியத்தை முழுமையாக உணர முடியும்.

31 வயதாகும் மேக்னஸ் கார்ல்சன் நோர்வே நாட்டைச் சேர்ந்தவர். பிரக்ஞானந்தாவை போலவே கார்ல்சனும் சிறுவயதிலிருந்தே சதுரங்கப் போட்டிகளில் அதிக ஆர்வத்தோடு பங்கேற்றவர். தனது 13 வயதிலேயே கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றவர். அந்தச் சிறுவயதிலேயே சதுரங்க வரலாற்றின் ஆகச் சிறந்த வீரர்களில் ஒருவரான ரஷ்யாவின் அனடோலி கார்போவை ப்ளி ட்ஸ் போட்டி ஒன்றில் தோற்கடித்து சதுரங்கக் கட்டங்களுக்குள் அழுத்தமாகக் கால்பதித்தார். 19 வயதிலேயே உலகின் நம்பர் 1 இடத்தைப் பிடித்து ஆச்சரியப்படுத்தினார்.

அன்றைக்கு அந்த அரியாசனத்தில் அமர்ந்தவர் இன்று வரை இறங்கவில்லை. இப்போதும் அவரே உலகின் நம்பர் 1. இடையில், 2013இல் சென்னையில் நடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்துக்கு எதிராகப் போட்டியிட்டு முதல் முறையாக உலக சாம்பியன் பட்டத்தை வென்றார். இந்தியாவின் ஆகச் சிறந்த வீரரான விஸ்வநாதன் ஆனந்தால், கார்ல்சனுக்கு எதிராக ஒரு சுற்றைக்கூட வெல்ல முடியவில்லை. அதற்கு அடுத்த ஆண்டு நடந்த உலக சாம்பியன்ஷிப் தொடரில் மீண்டும் விஸ்வநாதன் ஆனந்துக்கு எதிராக கார்ல்சன் மோதினார்.

ஆனந்தால் ஒரே ஒரு சுற்றை மட்டுமே வெல்ல முடிந்தது. மீண்டும் கார்ல்சன் உலக சாம்பியன் ஆனார். அடுத்தடுத்து சதுரங்கத்தில் ஆதிக்கம் புரிந்துவரும் ரஷ்யாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த வீரர்களை வீழ்த்தி, தொடர்ச்சியாக 5 முறை உலக சாம்பியன் பட்டத்தை வென்று ஒரு உச்ச பட்ச நிலையை அடைந்திருக்கிறார். க்ளாஸிக், ரேபிட், ப்ளிட்ஸ் என அத்தனை வடிவ சதுரங்கப் போட்டிகளிலும் சாம்பியன் பட்டத்தை வென்றிருக்கும் ஒரே வீரரும் கார்ல்சன்தான்.

இப்படியான ஒரு வீரரைத்தான் 16 வயதே ஆன தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரக்ஞானந்தா இப்போது வீழ்த்தியிருக்கிறார். பிரக்ஞானந்தாவும் 12 வயதிலேயே கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்று, சதுரங்க ஆட்டத்தின் வருங்கால நம்பிக்கையாகப் பார்க்கப்பட்டவர். விஸ்வநாதன் ஆனந்த் போன்ற மூத்த வீரர்களின் வழிகாட்டுதலில் தொடர்ச்சியாகச் சிறப்பாகச் செயல்பட்டுவருபவர்.

இணையம் வழியாக நடைபெறும் எயார் திங் மாஸ்டேர்ஸ் ('AIRTHING MASTERS') எனும் ரேபிட் வடிவிலான தொடரின் எட்டாவது சுற்றில் பிரக்ஞானந்தாவும் கார்ல்சனும் மோதினார்கள். ரேபிட் என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் ஆடப்படும் சதுரங்க ஆட்டமாகும். உலகெங்கிலிருந்தும் 16 பேர் இந்தத் தொடரில் பங்கேற்றிருந்தனர். ரவுண்ட் ராபின் முறையில் ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் நாளில் மட்டும் பிரக்ஞானந்தா 4 வீரர்களுடன் மோதியிருந்தார்.

இந்த 4 போட்டிகளில் மூன்றில் தோற்று ஒன்றில் மட்டுமே வென்றிருந்தார். முதல் நாளை விட இரண்டாம் நாளில் பிரக்ஞானந்தாவுக்கு அதிக சவால்கள் காத்திருந்தன. சில முன்னணி வீரர்களை இரண்டாம் நாளில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதில், முக்கியமானவர்கள் கார்ல்சனும் லெவான் அரோனியனும். கார்ல்சன் உலகத் தரவரிசையில் நம்பர் 1 வீரர் என்றால், லெவான் நம்பர் 4 வீரர். பிரக்ஞானந்தாவோ 193 ஆவது இடத்தில் இருப்பவர். கோலியாத்தை தாவீது தோற்கடித்த அதே கதைதான். ஜாம்பவான்களான கார்ல்சன், அரோனியன் இருவரையும் ஒரே நாளில் பிரக்ஞானந்தா தோற்கடித்தார்.

குறிப்பாக, உலக சாம்பியனான கார்ல்சனை 39 நகர்வுகளில் ஆட்டத்திலிருந்து பின்வாங்க வைத்து அசத்தியிருந்தார். விஸ்வநாதன் ஆனந்த், ஹரிகிருஷ்ணன் ஆகியோருக்குப் பிறகு கார்ல்சனை தோற்கடித்த மூன்றாவது இந்திய வீரர் எனும் பெருமையை பிரக்ஞானந்தா பெற்றிருக்கிறார். மேலும், கார்ல்சனைத் தோற்கடித்த வீரர்களில் மிகவும் இளமையானவர் பிரக்ஞானந்தாதான். தோற்றவுடனேயே தாமதமின்றிக் கணினியை அணைத்துவிட்டு வெளியேறிய கார்ல்சனின் மனம் கார்போவை 13 வயதில் தோற்கடித்த அந்த நினைவுகளை நோக்கி நிச்சயம் அலைபாய்ந்திருக்கும்.

பிரக்ஞானந்தாவின் தந்தை ரமேஷ் பாபு போலியோவால் பாதிக்கப்பட்டவர், வங்கி ஊழியர். பிரக்ஞானந்தாவின் சகோதரியைத்தான் முதலில் செஸ் பயிற்சிக்காக அனுப்பியிருக்கிறார்கள். அக்காவின் மூலம் சதுரங்கத்தை அறியத் தொடங்கியவருக்கு ஒருகட்டத்தில் இந்த விளையாட்டின் மீது கொள்ளை ஆர்வம் ஏற்பட்டது. ஆறு வயதிலேயே புனேவில் நடந்த தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் பிரக்ஞானந்தா பதக்கம் வென்றார்.

அங்கிருந்துதான் எல்லாமே தொடங்கியது. அதன் பிறகு, பிரக்ஞானந்தாவின் வீட்டு வரவேற்பறை பதக்கங்களாலும் கோப்பைகளாலும் நிறையத் தொடங்கியது. இளம் வயதிலேயே 'இன்டர்நேஷனல்ஸ் மாஸ்டர்' எனும் பெருமையையும் பெற்றார். 2018இல் இத்தாலியில் நடந்த க்ரெடின் ஓப்பன் தொடரில் சிறப்பாக ஆடியதன் மூலம் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தையும் வென்றார். அப்போது அவருக்கு வயது 12 ஆண்டுகள் 10 மாதம் 13 நாட்கள் ஆகும். அன்றைய நாளுக்கு உலக அளவில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்ற இரண்டாவது இளம் வீரர் அவரே.

'கணினியுடன் போட்டி போடுவது ஒட்டப்பந்தயத்தில் காருடன் போட்டி போடுவது போன்றது' என்று விஸ்வநாதன் ஆனந்த் கூறியிருக்கிறார். ஆனால், பிரக்ஞானந்தா சூரக்கணினிகளையும் (SUPER COMPUTER) திணறடித்தவர். ■

**கார்ல்சன் உலகத் தரவரிசையில் நம்பர் 1 வீரர் என்றால், லெவான் நம்பர் 4 வீரர். பிரக்ஞானந்தாவோ 193 ஆவது இடத்தில் இருப்பவர். கோலியாத்தை தாவீது தோற்கடித்த அதே கதைதான். ஜாம்பவான்களான கார்ல்சன், அரோனியன் இருவரையும் ஒரே நாளில் பிரக்ஞானந்தா தோற்கடித்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தில் 9 தொழிலாளர்கள்...!

காயா

சயூரதன் வேலணையைச் சேர்ந்தவர். வயது 35 இருக்கும். திறமையான சீவல் தொழிலாளி. நேர்த்தியையும் ஒழுங்கையும் விருப்பையும் ஒருங்குசேர்த்துச் சலிப்பே இல்லாமல் தினமும் சீவலில் ஈடுபடுபவர்.

நெற்றியில் வீபூதிப் பட்டை, அதோடு சேர்ந்த குங்குமக் குறி வாயில் எந்நேரமும் மென்றுகொண்டிருக்கும் வெற்றிலை, நுனி விரலில் தடவப்பட்டுக் காய்ந்தேபோய்விட்ட சுண்ணாம்பு அதைவிட அவரது உடலைச் சுற்றிப் பொருத்தப்பட்டிருக்கின்ற தொழில் உபகரணங்கள் என்று சயூரதனைப் பார்க்க அங்கு உலாவும் மனிதர்களில் இருந்து வித்தியாசமாக இருப்பார்.

பனைகள் நிறைந்துள்ள தீவகத்தில் சயூரதனைப்போன்ற பல சீவல் தொழிலாளர்கள் இருப்பார்கள் என்று தேடினாலும் அத்தகைய தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாகவே இருந்தது. சயூரதனிடம் உரையாடிய பின்னர்தான் தெரிந்தது அவரது சீவல் குலத்திலே - சீவல் குடிகளைக் கொண்டமைந்த அவரது கிராமத்திலே நூறு வரையான குடும்பங்கள் இருந்தாலும் 9 வரையான சீவல் தொழிலாளர்களே சீவலில் ஈடுபடுகிறார்கள் என்பது.


"இப்ப பொடியள் சீவிறதில்லை. இப்ப சீவிறதுக்குள்ள பொடியள் தரவளி எண்டு பாத்தால் நான்தான் சின்ன ஆள். பொடியள் சீவிறதை விரும்புறதில்லை. ரவுணுக்கு வேலைக்குப் போறாங்கள். பொம்பிளைப் பிள்ளையள் கடையளுக்கு வேலைக்குப் போறமாதிரிப்போய் அவங்களும் கடையளிலை நிக்கிறாங்கள். அல்லது கொம்பனி வழிய வேலை செய்யிறாங்கள். சீவிறதில இறங்கிறதில்லை.

> **எனக்கு எல்லாமா 12 பனை. காலமையும் பின்னேரமும் சீவ வேணும். தவறவிட்டால் எல்லாம் நாசம். பழுதாகிடும். கள்ளு மட்டுமில்ல பனையும்தான்.**

ஊருக்குள்ள திரிஞ்சு பனையில ஏறி இறங்கிறது கஸ்ரமான தொழிலும்தான். அதாலை நிறையப்பொடியள் இதை விரும்புறதில்லை. அதைவிட சீவிறதுக்குப் பொடியங்களுக்கு வெக்கமும் இருக்கு. எங்கடை ஊருக்குள்ளேயே என்னோடை சேர்த்து 9 பேர்தான் சீவிறம் எண்டால் பாரண்...?" அந்தப் பகுதியிலிருந்த பனை ஒன்றில் ஏறிக் கள்ளை எடுத்து வந்து அதை மற்றொரு பரலுக்குள் ஊற்றிக்கொண்டிருந்த சயூரதன் இவ்வளவையும் சொல்லிவிட்டு அருகேயிருந்த மற்றொரு பனையில் ஏறுவதற்கு விரைந்தார். தொடர்ந்தும் கதை கொடுத்த எனக்கு "அரை மணித்தியாலத்துக்க இதைக்கொண்டு போய் கோப்பிரேஷனிலை குடுக்கவேணும்;" என்று அவதிப்பட்டார்.



மற்றொரு பனையில் தொற்றிய அவர் கிட்டத்தட்ட 10 அடிகளுக்கு அப்பால் போயிருப்பார். தனது தோளில் கொண்டு சென்ற கயிற்றைப் பனையுடன் தன்னைச் சேர்த்துச் சுற்றிக் கட்டி அதைக்கொண்டு மிக வேகமாக ஏறினார். பனை உச்சியை அடைந்ததும் அந்தக் கயிற்றின் உதவியுடன் சுற்றிச் சுழன்று அங்கே முட்டிகளிலும் பிளாஸ்ரிக் போத்தல்களிலும் வடிந்திருந்த கள்ளைத் தான் கொண்டுசென்ற கலத்துக்குள் விட்டார். அவற்றைச் சுறு சுறுப்பாகத் திரும்பவும் சரிசெய்து வைத்துவிட்டுக் கீழே இறங்கினார். சேகரித்த கள்ளைக் கொண்டுசென்று தொடுக்கவேண்டிய அவசரம் அவரது வேகத்தில் தெரிந்தது. ஒரு நாளைக்கு எவ்வளவு கள்ளுக் கிடைக்கும்? என்று அவரது தொழில் பற்றி இப்போது கேட்டேன்.



"காலமை 31 போத்தில், பின்னேரம் 15 போத்தில் அப்பிடி வரும்..." என்று நறுக்காகப் பதில் சொன்னார். அவரது அவசரம் அதில் தெரிந்தது. குறிக்கப்பட்ட நேரத்துக்குள் அவற்றைக் கொண்டுசேர்க்காவிட்டால் அவரது சீவியம் - அன்றைய கஸ்ரம் அவ்வளவும் பாழ் என்று புரிந்தது.

கள்ளைப் பெரியதொரு பரலுக்குள் ஊற்றிக்கொண்டிருந்தார். அவரது கைகள் கறுத்து மரத்துக் காய்ந்து போயிருந்தன. ஒரு நாளைக்கு எத்தினை பனையில ஏறுகிறீர்கள்? என்று கேட்டேன். கள்ளை ஊற்றிய படியே பதில் சொன்னார்.

"எனக்கு எல்லாமா 12 பனை. காலமையும் பின்னேரமும் சீவ வேணும். தவறவிட்டால் எல்லாம் நாசம். பழுதாகிடும். கள்ளு மட்டுமில்ல பனையும்தான். பிறகு தொழிலில்லாமல் காயவேணும். வருத்தம் ஏலாது எண்டு போகாமல் விட ஏலாது. அப்பிடிப் போகாட்டில் வேறை யாரையாவது அனுப்பிச் சீவ வேணும். அதுக்குவேறை உவையளுக்குக் கடிதம் குடுத்துச் சொல்லவேணும். அப்பிடிச் சீவப்போறவனும் பாளையப் பதமாச் சரியாச் சீவ வேணும். பிறகு நான்போய்ப் பார்க்கேக்க என்னை மாதிரி நான் சீவுற மாதிரிச் சீரா இருக்காது. ஏலுமான வரைக்கும் நானே சீவுறதுதான் நல்லது."

உங்களுக்கு வருமானம் எப்படி?

"சொன்னான்தானே காலமை 31 போத்தில் பின்னேரம் 15 போத்தில் வரும். குறையுமே தவிர கூடாது. ஒரு போத்தில் எங்களிட்டை நூறுக்கு எடுக்கினமெண்டால் கணக்குப் பாருங்கோவன்...?" பதிலை என்னிடமே விட்டார். அத்தோடு அந்த வருமானத்திலும் குறைப்பு இருக்கிறது என்றார்.


"எங்களுக்குப் பென்சன் காசு, காப்புறுதிக்காசு, சங்கக் காசு எண்டு சொல்லி இதிலை கழிச்சுத்தான் மிச்சம் வரும். ஒவ்வொரு நாளும் காசு தரமாட்டினம். கள்ளைக் கொண்டுபோய் ஊத்தினால் அளந்தெடுத்துப் போட்டுக் கிழமையில ஒருக்கால் கணக்குப் பார்த்துக் காசு தருவினம்..." என்ற அவர் தனது வேகத்தில் குறை வைக்கவில்லை. வியர்வையில் குளித்தே சீவிட்டிருந்தார். ஆனாலும் தனது சைக்கிளில் கள்ளுக் கலன்கள், மற்றும் தொழில் உபகரணங்களைக் கொழுவிக்கொண்டு மெல்லிய சிரிப்புடன் என்னிடமிருந்து விடைபெற்றார்.

அவரது தொழில் நவீன உலகுக்கு அறிமுகமாகியுள்ள பல தொழில் முறைகள் - வருமான மார்க்கங்களால் நலிந்து வருவதும் அந்தத் தொழிலுக்கு வழங்கப்படாத ஊக்கம், மதிப்பு, வருமானம் ஆகியவற்றால் அதில் ஈடுபடுவோர் குறைந்தும் கைவிடப்பட்டும் வருவதும் எனது மனதில் மேலும் தேடலைத் தூண்டின.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?



## 08 யாசகம் பெறுவோர் ஏன் பெரும்பாலும் கோவிலுக்கு வெளியே இருக்கின்றனர்...?

ஆலயங்களுக்கு முன்னாள் வரிசையில் இருந்து பலர் யாசகம் பெறுவார்கள். அவர்கள் ஆலயங்களுக்கு வெளியே இருந்து யாசகம் பெறுவார்களே தவிர ஆலயத்துக்குள் சென்று யாசகம் பெறுவதில்லை. ஆலயத்துக்கு வெளியே யாசகர்களின் பகுதி என்று கருதக்கூடிய இடம்கூட இருக்கும். அதிலும் பெரும்பாலும் இந்து, சைவக் கோவில்களுக்கு வெளியே இந்த யாசகர்களைக் காலம் காலமாகக் காணமுடிகிறது. இவர்கள் அதிகம் ஆலயத்துக்கு வெளியே இருந்து ஏன் யாசகம் பெறுகிறார்கள்? ஏன் அப்படி? என்று தேடிப் பார்த்தால்...,

**காரணம் 1**
**(வழிபாட்டுக்கு இடையூறளிக்காமை)**

யாசகம் என்கிற தர்மம் வழங்குவதற்கு வழிபாட்டிடமான ஆலயம் சிறந்தது என்று இறை நம்பிக்கையுள்ளவர்கள் சொல்கிறார்கள். அங்கு அதிகம் பேர் கூடுவதும் சாதரணமாக நடக்கிறது. இறைவனைத் தொழ வருவோர் யாசகர்களுக்கு உதவுவதைப் பெருமையாகவும், ஒருவகையான ஜீவ காருண்யமாகவும் கருதுகிறார்கள். இதனால் ஆலயங்களில் யாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலை உருவாகியிருக்கலாம். உள்ளே சென்று அமைதியாக இறைவனைத் தொழுகின்ற பக்தர்களின் வழிபாட்டுக்கு இடையூறளிக்காமல் ஆலயத்துக்கு வெளியே அமர்ந்து அதைப் பெறுவதற்கு யாசகர்களும் பழகியிருக்கலாம்.

**காரணம் 2**
**(தாழ்த்தப்பட்டவர்களே யாசகம் பெறுகின்றனர்)**

உயர்சாதி என்று வரையறுக்கப்பட்டிருப்பவர்களோ, மன்னர் பரம்பரை என்று கருதத்தக்கவர்களோ, வணிகர்களோ யாசகர்களாக இருப்பதில்லை. குலத்தால் தாழ்த்தப்பட்டவர்களாக முத்திரை குத்தப்பட்டவர்களே அதிகம் யாசகம் பெறுகின்றனர். தாழ்த்தப்பட்ட இவர்கள் கோவிலுக்குள் நுழைந்தால் கோவிலானது தீட்டாகிவிடும் என்பதால் அவர்களைக் கோவிலுக்கு வெளியே இருக்கவிட்டு பிச்சையிடும் வழக்கம் இருந்து வருகிறது. முன்வாசலைத் தாண்டி உள்ளே செல்லும் உயர் சாதியினர்கூட கருவறைக்குள் கால் வைத்தால் அது தீட்டாகிவிடும் என்பது கோவிலுக்குள் நிலவுகின்ற மற்றொரு பாகுபாடு.

நந்தனார் என்கிற தாழ்த்தப்பட்ட ஒருவர் கோவிலுக்குள் நுழைய முற்பட்டபோது தடுத்து நிறுத்தப்பட்டார். நந்தனார் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தன்னை வணங்குவதற்காகக் குறுக்கே இருந்த நந்தியை விலக்கிக் காட்சி கொடுத்தார் சிவபெருமான் என்று பெருமையாகக் கூறப்படுகிறது. "நந்தனார் எனது பக்தன் அவனை உள்ளே விடுங்கள்" என்று கூறாத சிவனின் அதிசயச் செயலே இங்கு முக்கியப்படுத்தப்படுகிறது. கோவிலுக்குள் புக முற்பட்டதால் நந்தனார் அந்த இடத்திலேயே அடித்துக்கொல்லப்பட்டுத் தீமூட்டி எரிக்கப்பட்டதை சோதியுடன் கலந்தார் என்று கூறப்பட்டது.

அதன் தொடர்ச்சியாகவே இன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குள் புகுந்துவிடாதபடி வெளியே வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர். திருவிழாக்களின்போது இவ்வாறான மக்கள் சுவாமி தரிசனம் செய்வதற்காகவே சுவாமி வெளிவீதியுலா நடத்தப்படுகிறது.

பிராமணர்கள் தேகத்தில் பூநூல் போட்டிருக்கிறார்கள். கோவிலுக்குள் மேலங்கியைக் கழற்றி வெறும் தேகத்துடன் சூத்திரர்கள் செல்கிறார்கள் (பிராமணர் தவிர அனைத்துச் சாதியினரும் சூத்திரர்களே). தாம் மேல் நிலையில் இருப்பதைக் காட்டுவதற்காகவும் சூத்திரர்களையும் தம்மையும் வேறுபடுத்துவதற்காகவும் பிராமணர்கள் பூநூலை அணிந்திருப்பர். அதேபோல உயர்குடிப் பிறந்தவர்கள் என்று கூறிக்கொள்வோர் தம்மை உயர்த்திக் காட்டுவதற்காக வெளியே உள்ள யாசகம் பெறுவோரை ஒப்பீடாக்குகின்றனர். இதனால் அவர்களைத் தொடர்ந்தும் கோவிலுக்கு வெளியே அழுக்காக வைத்திருக்க விரும்புகின்றனர்.


**காரணம் 3**
**(தாழ்த்தப்பட்டவர்கள் அழுக்காக இருக்கிறார்கள்)**

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒடுக்கவும்படுகிறார்கள். அந்த மக்களின் உழைப்பு உயர்சாதியினரால் தொடர்ச்சியாகச் சுரண்டப்பட்டு வருவதால் அவர்களுக்கு நல்ல உணவோ, உடையோ, படுத்துறங்க வீடுகளோ இல்லை. இதனால் இந்த ஏழைகள் குளித்துத் துப்புரவாக இருக்கவோ நல்ல ஆடை அணியவோ வாய்ப்பில்லை. அழுக்காக இருப்பதைக் காரணம் காட்டி அவர்களைக் கோவிலுக்குள்ளே விடுவதில்லை. ■

---

## மின் அதிர்ச்சியில் வளரும் குருத்தெலும்பு

வெ.ஈஸ்வரன்



முழங்கால் மூட்டுப் பகுதியில் மென்மையான குருத்தெலும்பு (CARTILAGE) உள்ளது. சவ்வு போன்ற இந்தக் குருத்தெலும்பு தேயும்போது அல்லது இறுக்கமாக மாறும்போது மூட்டுவலி ஏற்படுகிறது.

தொடை எலும்புக்கும் கால் எலும்புக்கும் இடையில் கீழ் மூட்டு உள்ளது. இந்த மூட்டில் உள்ள குருத்தெலும்புதான் இரண்டு எலும்புகளையும் நெகிழ்வாகப் பிணைக்கிறது. புரத நார்களாலும் வளைந்தால் மீண்டும் இயல்பு நிலையைப் பெறும் நெகிழும் நார்களாலும் (ELASTIN) ஆன சிறப்புத் திசுதான் குருத்தெலும்பு. இதற்கு ரப்பர் போல வளையக்கூடிய, நெகிழக்கூடிய தன்மை உண்டு.

மூப்படைவதை எப்படித் தடுக்க முடியாதோ அப்படித்தான் மூட்டுத் தேய்மானத்தையும் தடுக்க முடியாது. வயதாகும்போது குருத்தெலும்பு தேய்மானமாகிக்கொண்டே போகும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் தேய்மானம் அடைந்துவிட்டால், ஆர்த்தரைட்டிஸ் எனப்படும் முடக்குவாத நோயாக மாறிவிடும்.

மூட்டுவலிக்கு முதுமை தவிர உடல் பருமனும் முக்கியக் காரணம். மேலும், சில நோய்கள் காரணமாகவும் முடக்குவாதம் ஏற்படலாம். விபத்தில் மூட்டுச் சவ்வு கிழியலாம்.

முடக்குவாதம் முற்றிவிட்டால், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைதான் இன்று ஒரே வழி. பழுதுபட்ட பகுதியை அறுவை சிகிச்சை மூலம் நீக்கி, உடலின் வேறு பகுதியிலிருந்து அல்லது கொடையாளரிடமிருந்து பெறப்பட்ட குருத்தெலும்பைப் பொருத்துகிறார்கள். இதில் பல பாதகங்கள் உண்டு. உடலின் ஒரு பகுதியிலிருந்து குருத்தெலும்பை எடுத்துவிட்டால் அங்கே சிக்கல் ஏற்படும். கொடையாளர்கள் எண்ணிக்கையும் குறைவு. பல நேரம் ஒருவரின் திசு இன்னொருவருக்குப் பொருந்தாமலும் போய்விடும்.

ஆரோக்கியமான குருத் தெலும்பை மறுபடி துளிர்க்கச் செய்துவிட்டால், பட்ட மரம் பச்சை மரம் ஆவது போல மூட்டும் புதிதாகமாறி விடும். கனெக்டிகட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வியட்நாமிய அமெரிக்கர் தன் டக் நுயென் பல ஆண்டுகளாகக் குருத்தெலும்பு மீளுருவாக்க ஆய்வுகளில் ஈடுபட்டுவருகிறார். மின் அதிர்வுகள் குருத்தெலும்பை மீளுருவாக்கம் செய்யும் என இவரது ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

தன் டக் நுயென்

உடல் திசுக்களின் உள்ளே மட்கும் தன்மை கொண்ட நானோ ஃபைபர் பாலிமர்களைப் பயன்படுத்தி அறுவை சிகிச்சை செய்துவருகின் றனர். இந்த நானோ பொருள் மீது அழுத்தம் கொடுத்தால், சிறிதளவு மின்னோட்டம் வெளிப்படும். வலு குறைந்த மின்னோட்டத்தாலும் குருத்தெலும்பு செல்களை ஈர்க்கும். குருத்தெலும்பு செல்கள் குவிய, குவிய அங்கே புதிய குருத்தெலும்பு மீண்டும் உருவாகும். இது அசல் குருத்தெலும்பு போலவே இருக்கும்.

மூட்டுத் தேய்ந்த முயலின் கால்களில் அறுவை சிகிச்சை செய்து, நானோ பொருளை வைத்து பரிசோதனை மேற்கொண்டார் நுயென். முயலின் கால் மூட்டுகளில் மீண்டும் குருத்தெலும்பு வளர்ந்தது. மனிதனைப் போன்ற எடையுடைய பெரிய விலங்குகளில் இந்த ஆய்வை மேற்கொண்டால்தான் சிகிச்சையின் பலன் குறித்துத் துல்லியமாக முடிவுக்கு வர முடியும் என்கிறார் நுயென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுக்கு ஒரு காதலன் மட்டும் போதவில்லை

அராத்து

காதல், 'வாழ்க்கையில் எல்லாவற்றையும்விட மிகப் பெரியது'' என்று ஒரு பெண் நினைத்துக்கொள்ளலாம்; தப்பே இல்லை. அதை அனுபவித்து வாழலாம். இதற்கு ஒத்து வராதவனைத் தூக்கி எறியலாம். ஒரு பிரச்சினையும் இல்லை. எங்கு சிக்கல் வருகிறது எனில்... இப்படி அணுகும் பெண்களில் பலருக்கு ஒரு காதலன் மட்டும் போதவில்லை.

இதை அதிர்ச்சி மதிப்பீட்டிற்காகவோ, வெறும் பத்துப் பதினைந்து பேரிடம் மட்டும் பேசிவிட்டோ நான் எழுதவில்லை. இதற்கெற்றே என் தோழிகள், நண்பர்கள் என்று பலரிடமும் பேசினேன். இவர்களில், 'இதை நீ அவசியம் எழுது!' என்று உற்சாகமூட்டியவர்கள் என் தோழிகள் என்பதை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆகையால், நான் எழுதுவதை ஒரு தரப்பு ஆண்களின் புகார்களாக மட்டுமல்லாமல், ஒரு தரப்புப் பெண்களின் விருப்பங்களாகவும் படிக்கவேண்டும்.

*** *** ***

'என் காதல் காவியக் காதல்' எனக் கடல் மண்ணில் பெரும் சிற்பம் கட்டிக்கொண்டிருக்கும் பெண்கள், அதேசமயத்தில் இன்னொரு பையனிடமும் பேசுவதில் ஒரு நுட்பம் இருக்கிறது. ஆணைப் பொறுத்த அளவில் ஒரு பெண்ணைத் தாண்டி இன்னொரு பெண்ணிடம் பேசுவதே சீட்டிங்தான். ஏனென்றால், அவனுடைய கடைசி இலக்கு செக்ஸ். அதனால், இன்னொரு பெண்ணிடம் பேசுவதிலேயே ஆண் குற்றவுணர்வு அடைகிறான். ஆனால், பெண்ணைப் பொறுத்த அளவில் இன்னொரு பையன் தன்னை அணுகவேண்டும் என்பதே இலக்கு என்பதால், அவளுக்கு எந்தக் குற்றவுணர்வும் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறாள்.

ஆண்களுக்குப் பொதுவாகத் தோழிகள் கிடைப்பது சிரமம். இதை கண்கூடாகப் பார்க்கக் கிடைக்கும். ஆனால், பெண்களுக்கு அப்படி அல்ல. 'பெண்களுக்கு சுதந்திரம் இல்லை, ஆண்கள்போல வெளியே சுற்ற முடிவதில்லை' என்பன போன்ற பல பிராதுகள் இருந்தாலும், அவர்களுக்குத் தோழர்கள் கிடைப்பதிலும், காதலர்கள் கிடைப்பதிலும், எந்தச் சிரமமும் இல்லை. இதைத் தாண்டி என்ன உறவு என்றே தெரியாவண்ணம் சில ஆண்கள் கிடைப்பார்கள். 'இவன் சகோதரனா அல்லது காதலனா!' என்ற பெருங்குழப்பத்தை உண்டாக்கும் வகையில், சிலர் புழங்குவதை நீங்கள் பார்த்திருக்கக் கூடும்.

எனக்குத் தெரிந்த, நன்கு அறிந்த தோழிகளை வைத்தும், அவர்களின் கடுப்பான கணவன்மார்களை வைத்தும், என்னிடம் அவர்கள் பகிர்ந்துகொண்டவற்றை வைத்தும் சொல்கிறேன். இன்றைய சிக்கல்கள் இப்படியெல்லாமும் இருக்கின்றன.

1) ஒரு காதலன் வேண்டும். அவன் கணவன் மெட்டீரியல் அல்ல.

2) தீவிரக் காதலில் இருக்கையிலும், அவள் இன்னொருவனுக்கு நம்பிக்கை தருகிறாள்.

3) ரயில் முன்பதிவு சீட்போல, அவள் வெயிட்டிங் லிஸ்ட் மெயின்டெயின் பண்ணுகிறாள்.

4) பாய் பெஸ்டி எல்லாம் இப்போது வந்தது எனினும், ரகசியமாக அவளுக்கு எப்போதும் அந்தத் தேவை இருந்துகொண்டே இருக்கிறது.


5) சாஃப்ட் போர்ன் இல்லாமலேயே, அதற்கு வாய்ப்பிருக்கும் பலருடன் பழகுவதில் ஆர்வம் உள்ளவளாக இருக்கிறாள். அவளே அதைப் பற்றி எல்லாம் பெரிதாக யோசித்துப் பார்ப்பதில்லை.

இப்படி எல்லாம் ஆண்கள் மீதும் பிராதுகள் உண்டு. ஆனால், திருட்டுத்தனம் செய்கிறோம் என்று தெரிந்தே செய்கிறான். மாட்டிக்கொண்டால் செருப்படி வாங்கிக்கொள்கிறான். மேலும் குற்றவுணர்வில் உழல்கிறான். பெரும்பான்மை பெண்களுக்குத் தாங்கள் செய்வது என்னவென்றே தெரியாத பாவனையில் செய்துகொண்டேயிருக்கிறார்கள். அதாவது, திருட்டுத்தனம் செய்துகொண்டே காவல்துறையினன் வகிபாகத்தையும் எடுத்துக்கொள்கிறார்கள்.

ஓர் உதாரணம் சொன்னால் புரியும். 'ஒண்ணுமே தெரியாத பொண்ணு' என்று பெயரெடுத்த பெண் அவள். ஒரே சமயத்தில் இரண்டு பேருடன் ஓடிக்கொண்டிருந்தாள். ஒருநாள் மாட்டிக்கொண்டாள். யாரிடம் என்று கேட்கிறீர்களா? கணவனிடம் என்றே வையுங்கள். கையும் களவுமாக மாட்டிக்கொண்டாலும், எந்தப் பதற்றமும் அவள் அடையவில்லை. மிக மிக சாதாரணமாக நடந்துகொண்டாள். அவளுடைய விஸ்வரூபத்தையே அன்றுதான் அந்தக் கணவன் பார்த்தான்.

இன்னொன்றும் இதில் இருக்கிறது. இறுதியில், ஏதோ அவன் தவறு செய்துவிட்டதான ஒரு நாடகச் சூழலை உருவாக்கினாள். கணவன் குழம்பி மெண்டலாகிப்போனான். இது ஏன் என்று நான் யோசித்துப் பார்த்ததில் எனக்குத் தெரியவந்தது - அவர்கள் அவர்களுக்குத் தெரிந்து எந்தத் தவறும் செய்யவில்லை. இந்த லோகத்தின் விதிமுறைகள் எதுவும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. இந்த உலகின் விதிமுறைகள் எல்லாம் தாங்கள் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் மட்டுமே என அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

*** *** ***



**முதலிரவு முடிந்ததும் படுக்கையறையில் இருந்து, 'அக்கினேனி' என்ற வாசகம் பதித்த டிஷர்ட்டைப் போட்டுக்கொண்டு பெருமையுடன் போஸ் கொடுத்தாரே சமந்தா, அதன் மூலம் அவர் சொல்ல விரும்பிய செய்தி என்ன?**

பெண்களுக்கான உலகம் சிறியது என்று முன்னமே இந்தத் தொடரில் எழுதியிருக்கிறேன். ஆனால், அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைத் தங்கள் நண்பர்களிடமே பகிர்ந்துகொள்ள வேண்டிய தேவையும் சந்தர்ப்பமும் குறைவு. இவ்வகை வெளி அழுத்தங்கள் இல்லாத வாழ்க்கை வாழ்வதால் ஒரு விதத்தில் அவர்களுக்கு இது மிகச் சுலபமாக இருக்கிறது. ஒரு விதத்தில் அவர்களுக்கு இந்த வாழ்க்கை சிலாக்கியமாக இருக்கிறது. அவர்கள் அதிகம் பேசக்கூடியது எப்போதும், அப்போது காதலிக்கும் ஆணுடன்தான். எப்போதும் அவர்களுடன் பேசுவதற்கும், அவர்களின் வாழ்க்கையை பிஸியாக வைத்துக்கொள்வதற்கும் ஆண்கள் இருந்துகொண்டே இருக்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயமும் இருக்கிறது. ஒரு புது ஆண் ஒருத்தியுடைய வாழ்க்கையில் முதன்முறையாக வருகையில், அவன் செய்த முதல் வேலை அவளது கடந்த காலத்தை எல்லாம் கழுவிவிட்டு, அவளுக்கு ஞான ஸ்நானம் கொடுப்பதுதான். சாத்தான்களுக்கும்கூட இப்படி தேவதை மேக்கப் போட்டுவிடும் வேலையை நன்கு செய்பவர்கள் ஆண்கள்.

*** *** ***

**பெண்கள் மீது நான் பகிரங்கமாக வைக்கும் இன்னொரு குற்றச்சாட்டு இது!**

எவ்வளவுதான் உயரத்துக்குப் போனாலும், தன்னைவிட எவ்வகையிலாவது உயரமான ஆண் மகனையே தன் வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுப்பது. ஒரு காதலில் இருக்கும்போது பிரேக் அப் வருவது சகஜமானது - அது பல பைத்தியக்காரக் காரணங்களுக்காக வரும் - பைசா பெறாத காரணங்களுக்காக வரும் பிரேக் அப்களை நான் வரவேற்கிறேன். அதன் தன்மையே அதுதான். அதைக் கொண்டாட வேண்டும். ஆனால், கணக்குப் போட்டு வரும் பிரேக் அப்களை நான் வெறுக்கிறேன்.

ஒருவனுடன் தீவிரக் காதலில் இருக்கும் பெண், அவனுடன்தான் தன் திருமணம் என்ற முடிவில் இருக்கும் பெண், அவனைவிட பெட்டர் ஆப் ஷன் கிடைத்ததும் - பெட்டர் ஆப்ஷன் என்பது சமூகத்தில் ஒப்பீட்டளவில் அவனுக்கு இருக்கும் உயரிய இடம் - இவனைக் காரணமே சொல்லாமல் வெட்டிவிடுகிறாள். ஆணுமே பெரிய இடத்துச் சம்பந்தம் கிடைத்ததும் மாறலாம். ஆனால் காரணம் சொல்லி, கேவலப் பட்டு மாறுவான். அது வெளிப்படையாகத் தெரியும். இவள் மாறுவது, அவளைத் தவிர யாருக்கும் தெரியாது என்பதுதான் முக்கியமான விஷயம்.

ஒன்று காரணமே சொல்லாமல் பிரிந்து விடுவாள். அல்லது காதலித்துக்கொண்டிருக்கும் ஆசாமி அளவுக்கதிகமான கேனையனாக இருந்தால் - 'உனக்கு நல்ல வாழ்க்கை அமையறதுதான் முக்கியம்' எனச் சொல்லி முத்தமிட்டு அனுப்புபவனாக இருந்தால், ஓர் இரவு தங்கிவிட்டு பிரியும் அளவுக்குத் தேர்ந்த காதல் கார்ப்பரேட்டாக இருக்கிறாள்.

சில கேள்விகளை நாம் கேட்டுக்கொள்வோம். எல்லோருக்கும் தெரிந்த சினிமா நடிகர் நடிகைகளை எடுத்துக்கொள் வோம். நடிகர்கள் சாதாரண பெண்களைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்வ தைப் பார்த்திருப்போம். ஏன், பெரும் பாலும் நடிகைகள் அப்படி ஒரு சராசரி ஆணைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்வதைப் பார்க்க முடியவில்லை?

நடிகை என்றாலே நடிகர், இயக்குநருடன்தான் காதல். சரி, தொழில் ரீதியாகப் பழக, இவர்களுடன்தான் வாய்ப்பு என்று வைத்துக்கொண்டாலும், தொழில் அதிபர் எங்கிருந்து வருகிறார்?


இப்படி எந்த நடிகராவது, பெண் தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## பதிப்புத் துறையில் சுத்துமாத்து

கிருபை ராசா - நல்லூர்



வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் அரசியல் தேவைகள், சமூகத் தேவைகள், ஆன்மீகம், விவசாயம் மற்றும் பல விடயங்களுக்காகப் பத்திரிகை, சஞ்சிகை, இணையப் பத்திரிகைகள் என்பவற்றை வெளியிடும் நோக்கத்துடன் வடக்குக் கிழக்கில் வாழ்கின்றவர்களைத் தொடர்புகொள்கிறார்கள். அவ்வாறு தொடர்புகொண்டு தமது தேவையை நிறைவேற்ற முனையும் போது தம்மிடம் எல்லா வசதிகளும் உண்டு எனப் பொய்கூறி இது ஒரு பிரச்சினையான விடயமல்ல உடனே தொடங்கலாம் உடனே பதிவு செய்யலாம் எனப் பலர் உள்ளூரில் முந்துகின்றனர்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் உள்ளூரவர்களை வெளிநாட்டவர்கள் பலரும் குற்றம் சாட்டுகிறார்கள். இது சரிதானா? இதில் சுத்துமாத்து இருக்கிறதா? என்பதைத் தேடிப் பார்த்தபோது வெளிநாட்டில் வாழும் ஒரு வருக்குப் பல விடயங்கள் தெரியவந்திருக்கின்றன. போர் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் இதுவிடயத்தில் பல மாபியாக்கள் உருவாகி ஒரு நபரே பல பெயர்களில் இயங்குவதையும் கண்டுபிடித்திருக்கிறார்.

ஒரு பத்திரிகையைச் செய்வதற்கு ஒரு பெண் பக்க வடிவமைப்பு விடயத்தில் 80 ஆயிரம் ரூபா கேட்டார். அதில் பக்க வடிவமைப்புக்கு 30 ஆயிரம் ரூபாவும் தனது சம்பளமாக 50ஆயிரமும் தரவேண்டும் என்றார். பின்னர் அந்தப் பெண் பற்றித் தேடிப்பார்த்தபோது அவருக்குக் கணினியில் தட்டச்சுக் கூடச் செய்யத் தெரியாது என்று தெரியவந்தது.

கணினிகள், அச்சகம், வடிவமைப்பாளர்கள், இணையத்தளங்களில் பதிவேற்றுவோர், அலுவலகம், அதற்கான வசதி வாய்ப்புகள் எனப் பலவற்றையும் சேர்த்த நிறுவனம் போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி வெளிநாட்டவர்களில் பலரின் பணத்தை ஏப்பம் விடுகின்ற ஒரு சுத்துமாத்து வியாபாரமே இந்தப் பதிப்புத்துறையில் காணப்படுகிறது. வெளிநாடுகளில் வாழ்பவர்கள் தமது முதலீடுகளை உரியவாறு விசாரிக்காமல் மேற்கொள்ள முற்பட்டதால் இந்த மாபியாக்கள் பலரை ஏமாற்றியிருக்கிறார்கள். பல பத்திரிகைகள் தொடங்கப்பட்டு ஒரு சில வெளியீடுகளுடன் நூர்ந்துபோன உதாரணங்கள் பலவுண்டு.

இந்தத் துறையில் புதிதாக இறங்குபவர்கள் இந்தச் சுத்துமாத்துக்காரர்களிடம் சிக்காமல் இருப்பது நல்லது. இதைவிடச் சில செய்தியாளர்கள் ஒரே செய்தியைப் பல வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து அதிக பணம் கறக்கின்றனர். அதேவேளை ஒரு கட்டுரையை எழுதுவதற்கு அதிக பணம் அறவிடுபவர்களும் உள்ளனர். இவ்வாறு இரகசியமாகப் பணம் வாங்குபவர்கள் தம்மைத் தமிழ்த் தேசியத்தில் மாறாத பற்றுள்ளவர்களாகத் தமது எழுத்துகளின் வாயிலாக மக்களை நம்ப வைக்கின்றனர். வெளிநாட்டுப் பணம் என்றால் சும்மாவா?



இந்த வார சமையல்

## கடலை வடை



வடை என்பது பழமையும் பாரம்பரியமும் மிக்க உண்டி. பாட்டி வடை சுட்ட கதையில் தொடங்கி உணவுக் கடைகளில் தவறாது இருப்பதும் இந்த வடைதான். அந்த வகையில் இந்த வாரச் சமையல் பகுதியில் நாம் பார்க்கவிருப்பது கடலைப் பருப்பில் வடை தயாரிப்பது எப்படி என்று. உழுந்து மற்றும் கடலைப் பருப்பு ஆகியவற்றில் வடை தயாரிப்பதே அதிகம். தற்போதைய உளுந்து விலையேற்றத்தில் அனைவரும் கடலைப் பருப்பில் வடை தயாரிக்கவே அதிகம் விரும்புகின்றனர். இந்தமுறை கடலைப் பருப்பு வடையை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

கடலைப் பருப்பு - அரைக் கிலோ, சின்ன வெங்காயம் - 150 கிராம், செத்தல் மிளகாய்கள் - 5, சீரகம் ஒரு மேசைக்கரண்டி, உப்பு தேவையான அளவு, பொரித்தெடுப்பதற்கு மரக்கறி எண்ணெய்.

**எப்படிச் செய்வது...?**

கடலைப் பருப்பை கழுவிச் சுத்தம் செய்து நீரில் ஊற வைக்க வேண்டும், குறைந்தது 2-3 மணித்தியாலங்கள் ஊறவைத்த பின்னர் உப்புக் கலந்து அதைச் சொர சொரப்பாக அரைத்துக்கொள்ள வேண்டும். கடலைப் பருப்பு வடைக்குப் பதமாக அரைத்தெடுப்பதே முக்கியமானது. கடலைப் பருப்புகள் முழுதுமாக அரைபடாமலும் அரைகுறையாக அரைத்தெடுப்பது முக்கியம். அவ்வாறு அரைத்ததும் நறுக்கிய சின்ன வெங்காயம், செத்தல் மிளகாய்கள், சீரகம் ஆகியவற்றைச் சேர்த்துப் பிசைந்து கொள்ள வேண்டும்.

தாச்சி ஒன்றில் எண்ணெய் ஊற்றிச் சூடாகியதும் அரைத்த கலவையை தகுந்த அளவில் எடுத்துக் கையில் வைத்துச் சிறிய அளவில் தட்டையாக்கிப் பொரித்தெடுக்க வேண்டும். வாசனைக்குக் கறிவேப்பிலைகளை நறுக்கிச் சேர்த்தாலும் நன்று.



**பெண்ணுக்கு ...**

லதிபரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டதைப் பார்த்திருக்கிறீர்களா? இவர்களுக்கு மட்டும் ஏன் இவ்வளவு கால்குலேஷன்? ஒரு மோசமான, டுபாக்கூர் தொழிலதிபரையாவது காதலித்து ஏமாறுவார்களே தவிர, தன்னை உண்மையாகக் காதலிக்கும் சாதாரண ஆசாமியைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள் என்றால், அங்கே எங்கே காதல் இருக்கிறது?

சமந்தாவையே எடுத்துக்கொள்ளுங்கள். அழகி தான். திறமைசாலிதான். நாளெடுத்துச் சிரமப் பட்டுதான் முன்னேறினார். இப்போது அவர் விவகாரத்து செய்து, 'ஓ சொல்றியா மாமா...!' என குத்துப்பாட்டுக்கு ஆடியதும், அவரை என்னமோ பெண்ணியப் போராளி போலச் சித்திரிக்கிறார்கள். ஆனால், அவர் காதலித்தது நாக சைதன்யாவையா அல்லது அக்கினேனி பரம்பரை எனும் செல்வாக்கு, அதிகாரத்தையா என்ற கேள்வி எனக்கு உண்டு.

முதலிரவு முடிந்ததும் படுக்கையறையில் இருந்து, 'அக்கினேனி' என்ற வாசகம் பதித்த டிஷர்ட்டைப் போட்டுக்கொண்டு பெருமையுடன் போஸ் கொடுத்தாரே சமந்தா, அதன் மூலம் அவர் சொல்ல விரும்பிய செய்தி என்ன? அக்கினேனி என்பது அவர் படித்து வாங்கிய பட்டமா? அல்லது திறமைக்குக் கிடைத்த விருதா?

நான் பேசிக்கொண்டிருக்கும் வகைப்பட்ட பெண்களின் ஒரு பிரதிநிதியாகவே சமந்தாவைப் பார்க்கிறேன். நான் அக்கினேனி என்பதை ஒரு பெருமை மிகு அடையாளமாகப் பார்க்கவில்லை. சமந்தா அப்படிப் பார்த்ததாலேயே, அதை நோக்கி அவர் நடுவிரலைக் காட்டுவதான தொனியில், 'ஓ சொல்றியா மாமா!' பாடல் அர்த்தப்படுத்தப்படுவதாக அனுமானிக்கிறேன்.

இந்த விஷயத்தில் நாக சைதன்யா கண்ணியமாக நடந்துகொள்வதாகவே நான் எடுத்துக்கொள்கிறேன்.

சமந்தா அக்கினேனியைக் காதலித்தாராம். இப்போது அக்கினேனிக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்துகிறாராம். அதுவும் முற்போக்குப் பெண்ணிய முகமூடியில்... கஷ்ட காலம்!

அடுத்த வாரம், ஆண்களின் சில பல காமப் பிராதுகளைப் பேசிவிட்டு, அடுத்து இனி பெண்கள் தரப்பு வாதத்துக்குத் தொடரை விட்டுவிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்

ஹூயி பிராண்டெல்லோ

தமிழில் எஸ்.கயல்



அதிவிரைவு வண்டியொன்றில் ரோமைவிட்டுக் கிளம்பிய பயணிகள், சுலோமனாவுக்குச் செல்லும் சிறிய புராதான உள்ளூர் ரயிலுக்காக, ஃபேப்ரியோனாவின் சிறிய புகைவண்டி நிலையத்தில் விடியும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

முந்தைய இரவு அந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஐந்து பேர் தங்கியிருந்தனர். அது இப்போது புழுக்கத்துடனும் புகைமூட்டத்துடனும் இருந்தது. கோணல்மாணலாக மூடையைப் போலிருந்த, துயரார்ந்த முகத்துடனிருந்த பருமனான ஒரு பெண்மணி அதில் இப்போது ஏறினாள். வாயிலிருந்து புகையை வெளியேற்றியபடி, அழுக்கான மெலிந்த உடலும் பலவீனமான தோற்றமும் கொண்ட அவளுடைய கணவன் அவளைப் பின்தொடர்ந்து வந்தான். துயரத்துடன் காணப்பட்ட அவனுடைய முகம் சவம் போன்று வெளிறிப்போயிருந்தது. அவனுடைய பிரகாசமான சிறிய கண்கள் கூச்சத்துடனும் அமைதியிழந்தும் காணப்பட்டன.

முண்டியடித்து எப்படியோ இடத்தைப் பிடித்து உட்கார்ந்ததும் அவன் தன்னுடைய மனைவி அமர்வதற்காக இடம்விட்டு உதவிய பயணிகளுக்குப் பணிவாக நன்றி கூறினான். தன் சட்டையைக் கீழே இழுத்துவிட்டபடியிருந்த மனைவியைப் பார்த்து மென்மையாக, 'எல்லாம் சரிதானே? ஒன்றும் பிரச்சினை இல்லையே?' என்று கேட்டான்.

முகத்தை மறைக்கும்படி தன் அங்கியின் பட்டையைக் கழுத்துவரை இழுத்துவிட்டுக்கொண்டு இருந்தாளே தவிர அவனுடைய கேள்விக்கு அவள் பதில் அளிக்கவில்லை. அவன் சோகமாகப் புன்னகைத்த படி, 'மோசமான உலகம்' என்று முணுமுணுத்தான்.

இருபது வயதுடைய அவளுடைய ஒற்றைப் பிள்ளையை போர் அவளிடமிருந்து பிரித்துக்கொண்டு செல்லப்போவதால், மற்றவர்கள் அவள் மீது இரக்கம் கொள்வதற்காக அவர்களிடம் அதை விளக்கிச் சொல்வது தன்னுடைய கடமை என்று அவன் நினைத்தான். தங்கள் மகனுக்காகத் தங்கள் முழு வாழ்க்கையையும் அவர்கள் அர்ப்பணித்திருந்தனர். சுல்மனாவில் இருந்த தங்கள் வீட்டைவிட்டு அவன் கல்வி பயின்ற ரோம் நகருக்கு அவர்களும் அவனுடனேயே சென்றனர். குறைந்தபட்சம் ஆறு மாதங்கள்வரை போர்முனைக்கு அனுப்பப்பட மாட்டான் என்ற வாக்குறுதியுடன் போருக்குச் செல்ல விரும்பிய தங்கள் மகனை அனுமதித்தனர். ஆனால் எதிர்பாராத விதமாக அவன் மூன்று நாட்களுக்குள் கிளம்ப வேண்டும் என்றும் அவனைச் சந்தித்து விடைதரச் சொல்லியும் அவர்களுக்கு அழைப்பு வந்தது.

> ஒற்றைக் குழந்தையோ பத்து குழந்தைகளோ எதுவானாலும் சரி, ஒரு தகப்பன் தன் எல்லாக் குழந்தைகளின் மீதும் எந்த விதத்திலும் பாகுபாடு காட்டாமல் ஒரே விதமாகவே அன்பு செலுத்துகிறான்.

அந்தப் பெரிய அங்கிக்குள் அவள் வளைந்து நெளிந்துகொண்டு, காட்டு விலங்கைப் போன்று உறுமிக்கொண்டு இருந்தாள். எந்த விளக்கமும் அங்கிருந்த எவருக்கும் அவள் மீது துளியளவு இரக்கம்கூட வரவழைக்காது என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனெனில் அவர்கள் அனைவருமே அதே போன்ற துயரமான நிலையில்தான் இருந்தார்கள். இவள் பேசுவதைக் கூர்ந்து கவனித்த ஒரு பெண், 'உங்களுடைய மகன் இப்போதுதான் போர்முனைக்கே போகிறான் என்பதற்காக நீங்கள் கடவுளுக்கு நன்றி கூறவேண்டும். முதல் நாளே போருக்குச் சென்று இரண்டு முறை காயங்களுடன் திரும்பிவந்த என் மகன் மறுபடியும் போர்முனைக்கு அனுப்பப்பட்டு விட்டான்' என்றாள்.

இப்போது இன்னொரு பயணி, 'அப்படியானால் என் நிலையைப் பற்றி என்ன சொல்வீர்கள்? என் இரண்டு மகன்களும் என் சகோதர சகோதரிகளின் மூன்று மகன்களும் போர் முனையில் நிற்கின்றனர்' என்றாள்.

'இருக்கலாம்... ஆனால் எங்களுக்கு இருப்பதோ ஒரே மகன்' என்று அவளுடைய கணவன் அவர்களுடைய உரையாடலுக்கு இடையே புகுந்தான்.

'இதில் என்ன பெரிய வித்தியாசம் ஏற்பட்டுவிடப் போகிறது? ஒற்றைப் பிள்ளையானால் அவன் மீது அதீத கவனத்தைக் குவித்து அவனைக் கெடுத்துவிடும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் ஒருவேளை உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், மற்ற குழந்தைகளைவிட அதிகமாக அவன் மீது அன்பு செலுத்த முடியாது. பெற்றோரின் அன்பு என்பதொன்றும் குழந்தைகளுக்குச் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் பிரெட் இல்லை. ஒற்றைக் குழந்தையோ பத்து குழந்தைகளோ எதுவானாலும் சரி, ஒரு தகப்பன் தன் எல்லாக் குழந்தைகளின் மீதும் எந்த விதத்திலும் பாகுபாடு காட்டாமல் ஒரே விதமாகவே அன்பு செலுத்துகிறான். நான் இப்போது என்னுடைய இரண்டு மகன்களை எண்ணி வேதனைப்படுகிறேன் என்றால் அது ஒருவனுக்குப் பாதி வேதனை இன்னொருவனுக்கு அரை வேதனை எனும் விதத்தில் இல்லை. மாறாக இரட்டிப்பாக...'

கூச்சமுற்றுப் பெருமூச்செறிந்து, 'உண்மைதான்..... உண்மைதான்....' என்றவன், 'ஆனால் ஒருவேளை, நிச்சயமாக இந்த நிலை உங்களுக்கு ஏற்படாது என்று நம்புகிறேன், ஒரு தகப்பனுடைய இரண்டு மகன்களும் போர்முனையில் இருந்து, அதில் ஒருவனை இழந்துவிட்டால் அவருக்கு ஆறுதல் தர மற்றொருவன் மிஞ்சி இருக்கிறானே... இதற்கிடையில்...' என்றான்.

இடையில் புகுந்த இன்னொரு பயணி, 'ஆறுதல் அளிக்க ஒரு மகன் பிழைத்திருக்கிறான் எனில் அந்த மகனுக்காக அவர் வாழ வேண்டியிருக்கும். ஒற்றை மகனைப் பெற்றிருக்கும் ஒரு தந்தையின் மகன் இறந்து போனால் தானும் இறந்து தன் வேதனைகளுக்கு முடிவு கட்டிவிடலாம். இவை இரண்டில் எது மோசமான நிலைமை? என் நிலைமை உங்களுடையதைவிட மோசமானது என்பது உங்களுக்குப் புரிகிறதா?' என்றான்.

தன் வெளிறிய சாம்பல் நிறக் கண்கள் இரத்தச் சிவப்பில் மாற, சினத்துச் சிவந்த முகத்துடன் இடையில் குறுக்கிட்ட பருத்த உடலுடைய இன்னொரு பயணி, 'அபத்தம்' என்றான்.

அவனுக்கு மூச்சிரைத்தது. கட்டுக்கடங்காத ஆற்றல் பொருந்திய உள்மனத்தின் வன்முறை, பிதுங்கிய அவன் கண்களின் வழியே பீறிட்டுத் தெறிப்பதைப் பலவீனமான அவனுடைய உடலால் சிறிதும் தாங்கிக் கொள்ள இயலாதது போலிருந்தது. மற்ற பயணிகள் துயரத்துடன் அவனை வெறித்துப் பார்த்தனர். போர் தொடங்கிய முதல் நாளிலேயே தன் மகனைப் போர் முனைக்கு அனுப்பிய அந்தத் தந்தை பெருமூச்சுடன், 'நீங்கள் சொல்வது சரிதான். நம் குழந்தைகள் நமக்குச் சொந்தமானவர்கள் இல்லை. அவர்கள் நம் நாட்டுக்கு உரியவர்கள்....'


அடுத்த நொடியே, 'முட்டாள்தனம்! நாம் நம் குழந்தைகளைப் பெற்றெடுக்கையில் நாட்டைப் பற்றிச் சிந்திக்கிறோமோ என்ன? நம் மகன்கள் ஏன் பிறந்தார்கள் என்றால்.. அதாவது... அவர்கள் பிறக்க வேண்டியிருந்தது. அவர்கள் உயிர் பெற்றதுமே நம்முடைய சொந்த உயிரைத் தங்கள் உயிருடன் பிணைத்துவிடுகிறார்கள் என்பதுதான் உண்மை. நாம் அவர்களுக்குச் சொந்தமேயொழிய அவர்கள் நமக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமானவர்கள் இல்லை. அத்துடன் அவர்களுக்கு இருபது வயதாகும்போது அந்த வயதில் நாம் எப்படி இருந்தோமோ அதே போல் அவர்களும் ஆகிவிடுகின்றனர். நமக்கும் ஒரு தாய் தந்தை இருந்தனர். ஆனால் பெண்கள், சிகரெட்டுகள், மாயைகள், புதிய கழுத்துப் பட்டைகள் எனப் பல விஷயங்கள் இருந்தன. நம் இருபதாவது வயதில் நாடு நம்மை அழைத்திருந்தால் அப்பாவும் அம்மாவும் தடுத்திருந்தாலும் நாம் நிச்சயமாகப் போருக்குச் சென்றிருப்போம். இப்போது, இந்த வயதில், நாட்டின் மீதான அன்பு பெருமளவுக்கு இருந்தாலும் பிள்ளைகளின் மீதான பாசம் அதைவிட வலிமையாக இருக்கிறது. 'உன் மகனுக்குப் பதிலாகப் போர்முனைக்கு நீ போகலாம்' என்கிற நிலை ஏற்பட்டால் இங்கிருக்கும் நாம் ஒவ்வொருவருமே மகிழ்ச்சியுடன் போருக்குப் போக மாட்டோமா என்ன?' என்று பருத்த உடலுடைய பயணி வேகமாக மறுத்தான்.

இப்போது அங்கு அமைதி நிலவியது. அனைவரும் ஆம் என்பதாகத் தலையசைத்தனர்.

'அப்படியானால் நம் இருபது வயதுப் பிள்ளைகளின் உணர்வுகளை நாம் ஏன் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்? இந்த இளம் வயதில் அவர்கள் நம் மீது வைத்துள்ள அன்பைவிட அவர்களுக்குத் தம் நாட்டின் மீதான பிடிப்பே அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதானே இயற்கை, இல்லையா? அதாவது நான் சொல்வது நன்னடத்தையுடைய இளைஞர்களைப் பற்றி. அது அவ்வாறு இருப்பது இயற்கையான விஷயம் எனில், இருக்கும் இடத்தைவிட்டு அசைய முடியாத கிழவர்கள், ஆகவே வீட்டிலேயே கிடக்க வேண்டியவர்கள் என்றுதானே நம்மைப் பற்றி அவர்கள் நினைப்பார்கள்? பசியில் செத்துப் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, நாம் ஒவ்வொருவரும் தினமும் உண்ணும் பிரெட்டைப் போல, நாடு நமக்கு அத்தியாவசியமான இயற்கைத் தேவை என்று தோன்றினால், நாம் யாராவது சென்று அதனைப் பாதுகாக்க வேண்டும். இருபது வயதான நம் மகன்கள் போருக்குச் செல்கிறார்களே, அவர்களுக்காக நாம் கண்ணீர் சிந்த வேண்டியதில்லை. ஏனெனில் ஒருவேளை அவர்கள் இறந்துவிட்டாலும்கூட, காயத்தால் அழற்சியுற்ற உடலுடன் மகிழ்ச்சியாகவும்தான் இறக்கிறார்கள். அத்துடன் நான் பேசிக்கொண்டிருப்பது நல்ல ஒழுக்கநெறியுடைய இளைஞர்களைப் பற்றி. ஒருவன் வாழ்க்கையின் அசிங்கமான பக்கங்களை, அதன் சலிப்புகளை, சிறுமைகளை, மாயைகளினால் ஏற்படும் கசப்புகளைப் பார்க்காமல், இளமையாக மகிழ்ச்சியுடன் இருக்கும்போதே இறந்துவிட முடியுமெனில் அவனுக்காக அதைவிடச் சிறந்ததாக நாம் வேறெதைக் கேட்டுவிட முடியும்? எல்லோரும் அழுகையை நிறுத்துங்கள். எல்லோரும் என்னைப் போல் சிரியுங்கள்.. அல்லது என்னைப் போல் கடவுளுக்கு நன்றியாவது சொல்லுங்கள். ஏனெனில் இறப்பதற்கு முன் என் மகன் எனக்கொரு செய்தி அனுப்பியிருந்தான். அதில், 'மனம் விரும்பியபடி மிகச் சிறப்பான முறையில் வாழ்வை முடித்துக்




கொள்வதற்கான வாய்ப்பிருப்பதை எண்ணி திருப்தியுடன் மரிப்பேன்' என்று அவன் குறிப்பிட்டிருந்தான். ஆகவேதான், நான் துக்க ஆடையைக்கூட அணியவில்லை பாருங்கள்...' என்றான் பருத்த உடல்கொண்ட பயணி.

துக்க ஆடை அணியாததை அவர்களுக்கு நிரூபிப்பது போலத் தன் வெளிர் மஞ்சள் அங்கியை முன்னும் பின்னுமாக இழுத்துக் காண்பித்தான். ஓட்டையாக இருந்த அவனுடைய பல்லின் மேல் அவனது உதடுகள் உணர்ச்சி வேகத்தில் நடுங்கின. கண்கள் நீர் நிறைந்து அசைவற்றுக் கிடந்தன. பிறகு சிறிது நேரத்தில் பேரொலியுடன் அவன் சிரித்த சிரிப்பு இறுதியில் தேம்பலாக முடிந்தது.

'நிச்சயமாக, நிச்சயமாக' என மற்றவர்கள் இதை ஆமோதித்தனர்.

தன்னுடைய அங்கியின் மீதமர்ந்து ஒரு மூட்டையைப் போல மூலையில் சுருண்டுகிடந்த அந்தப் பெண் இவையனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்தாள். கடந்த மூன்று மாதங்களாகத் தனது கணவனுடைய பேச்சின் மூலமாகவும் நண்பர்களுடைய பேச்சின் மூலமாகவும் தன் ஆழ்ந்த துயரத்திலிருந்து எப்படியாவது ஆறுதல் பெற்றுவிடவும், ஒரு தாயாகத் தன் மகனைப் போருக்காகப் பிரியநேர்வதை - அவன் மரிக்கப் போகிறான் என்றாலும் பரவாயில்லை, அபாயத்துடன் வாழப்



போகிறான் என்பதை - எப்படி மறுக்காமல் ஏற்றுக்கொள்வது என்பதையும் அறிந்துகொள்ள அவள் முயன்றுகொண்டிருந்தாள். ஆனால் அவளிடம் கூறப்பட்ட எத்தனையோ சொற்களில் ஒரு சொல்கூட அவளைச் சென்றடையவில்லை. அவள் நினைத்திருந்ததற்கு மாறாக யாராலுமே அவளுடைய உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியவில்லை என்பது அவள் வேதனையை இன்னும் அதிகமாக்கியது.

ஆனால் இந்தப் பயணியின் சொற்கள் அவளைப் பெரு வியப்புக்குள்ளாக்கின. அவள் திகைத்துப்போனாள் என்றே சொல்லலாம். தவறு மற்றவர்கள் மீது இல்லை என்றும், யாராலும் தன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தான் நினைத்ததே தவறு என்றும் உணர்ந்தாள். தம் மகன்களுடைய பிரிவில், ஏன் இறப்பில்கூட, அழாமல் அதனை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ள விரும்பும் இத்தகைய பெற்றோரின் உன்னதமான உயரத்தை எட்டமுடியாத தன்னிடத்தில்தான் தவறு என்பதை அவள் அந்த நொடியில் புரிந்துகொண்டாள். அரசருக்காவும் நாட்டுக்காகவும் போரில் தன் மகன் ஒரு வீரனாக மகிழ்ச்சியுடன் வீழ்ந்துபட்டதை எந்தவிதமான வருத்தமும் இன்றி அங்கிருந்த மற்ற பயணிகளிடம் அந்தப் பருத்த ஆள் விவரித்துக்கொண்டிருந்த தகவல்களைத் தன் தலையை உயர்த்தி, தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து உடலை வளைத்துக் கூர்ந்து கவனிக்க முயன்றாள். அவள் தன் கனவிலும் நினைத்திராத, இதுவரை அறிந்திராத ஒரு உலகத்தின் மீது காலிடறி விழுந்துவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. துயரத்தை மறைத்துக்கொண்டு உணர்ச்சியற்ற கல்லைப் போல மகனுடைய இறப்பைப் பற்றி பேசிக்கொண்டிருந்த வீரம் மிக்க அந்தத் தந்தையை எல்லோரும் வாழ்த்துவதைக் கேட்டு அவள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள்.

இதுவரை அவன் பேசிய எதையுமே காதில் வாங்காதது போலவும், கனவு கண்டு விழித்தெழுந்தது போலவும், அந்தக் கிழவனைப் பார்த்து, 'அப்படியானால்.... உங்கள் மகன் உண்மையிலேயே இறந்துவிட்டானா?' என்று திடீரென்று கேட்டாள்.

எல்லோரும் அவளை முறைத்துப் பார்த்தனர். அந்தக் கிழவன் அவளை நோக்கித் திரும்பினான். பிதுங்கிக்கொண்டிருந்த கண்களால் அவளை வெறித்துப் பார்த்தான். அவனுடைய சிறிய சாம்பல் நிறக் கண்கள் நீர் நிறைந்தும் அச்சுறுத்தும்படியும் இருந்தன. பதில் கூறுவதற்குச் சில நொடிகள் முயன்றும் அவனால் பேசமுடியவில்லை. அவன் அவளை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே இருந்தான். அந்தப் பார்வை, ஏதோ அப்போதுதான், அந்த முட்டாள்தனமான, சூழலுக்குச் சற்றும் பொருந்தாத அந்தக் கேள்வியினால்தான், தன் மகன் உண்மையிலேயே இறந்துவிட்டதை, நிரந்தரமாக, எப்போதைக்குமாகத் தன்னைப் பிரிந்து

**அவன் பேசிய எதையுமே காதில் வாங்காதது போலவும், கனவு கண்டு விழித்தெழுந்தது போலவும், அந்தக் கிழவனைப் பார்த்து, 'அப்படியானால்.... உங்கள் மகன் உண்மையி லேயே இறந்துவிட்டானா?' என்று திடீரென்று கேட்டாள்.எல்லோரும் அவளை முறைத்துப் பார்த்தனர்**

விட்டதை அவன் உணர்ந்துகொண்டது போலிருந்தது. முதலில் சுருங்கிய அவனுடைய முகம், பயங்கரமான விதத்தில் விநோதமாக மாறியது. பிறகு தன் சட்டைப் பையிலிருந்து அவசரமாக ஒரு கைக்குட்டையை எடுத்தான். சுற்றியிருந்த அனைவரையும் திகைப்படையச் செய்யும்விதமாக, நெஞ்சைப் பிழிகிற துயரார்ந்த குரலில், கட்டுப்படுத்த முடியாமல் தேம்பி அழத் தொடங்கினான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகம் அல்லல்படுத்தும் அல்சர்

கு.கணேசன்

இன்றைய வாழ்க்கைச் சூழலில் அல்சர் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. உலகம் முழுவதிலும் நூற்றில் இருபது பேருக்கு இந்தப் பாதிப்பு உள்ளது. என்றாலும், சுகாதார வசதிகள் குறைந்த மூன்றாம் உலக நாடுகளில் இது இரண்டு மடங்கு அதிகம். மேலும், இங்கு 10 வயதிலேயே அல்சர் பாதித்துவிடுகிறது. 40 வயதில் இது ஆவேசம் காட்டுகிறது.

**எது அல்சர்?**

இரைப்பை மற்றும் சிறுகுடலின் முதல் பகுதியில் புண் ஏற்படுவதை 'பெப்டிக் அல்சர்' (PEPTIC ULCER) என்கிறோம். இரைப்பையில் ஹைட்ரோகுளோரிக் அமிலம் சுரக்கிறது. பெப்சின் என்சைம் உற்பத்தியாகிறது. இந்த இரண்டின் சுரப்புகளும் அதிகமாகும்போது இரைப்பை மற்றும் முன்சிறுகுடலில் உள்ள சவ்வு சிதைந்து புண்ணாகிறது. இதுதான் 'பெப்டிக் அல்சர்'.

**காரணங்கள் என்ன?**

அல்சர் ஏற்பட பல காரணங்கள் உள்ளன. என்றாலும், இரண்டே காரணங்கள்தான் முக்கியம். ஒன்று இரைப்பையில் அமிலம் அதிகமானாலும் அல்சர்! மற்றொன்று இரைப்பைச் சுவரின் தற்காப்பு சக்தி குறைந்தாலும் அல்சர்! இந்த இரண்டுக்கும் நம் நவீன வாழ்வியல் முறைதான் அடிப்படை!

அமிலச் சுரப்பு அதிகமாவதற்கு முதல் காரணம் அந்நிய நாடுகளின் துரித உணவுகள். இரைப்பையில் அமிலம் சுரப்பதை எஃப்.எம் வானொலியை டியூன் செய்வதற்கு ஒப்பிடலாம். 93.5 அலைவரிசையை டியூன் செய்தால் சூரியன் எஃப்.எம்; சக்தி எஃப்.எம்.முக்கு 106.4.

இதுமாதிரிதான், நாம் இட்லி சாப்பிட்டால் அதைச் செரிமானம் செய்ய சாதாரண அளவில் அமிலம் சுரக்கும். அதேவேளையில் செயற்கை நிறமும் மணமும் தூக்கலாக உள்ள மட்டன் பிரியாணி சாப்பிட்டால், அமிலத்தின் அளவு பல மடங்கு அதிகரித்துவிடும். அளவுக்கு அதிகமான அமிலம் ஓர் அக்கினிபோல் எழுந்து இரைப்பையைத் தாக்கும். அப்போது அல்சர் வரும்.

வானொலிகள் எல்லாமே சரியாக காலை 5 மணிக்கு ஒலிபரப்பை தொடங்கிவிடுவதுபோல் இரைப்பையிலும் காலை, மதியம், இரவு மூன்று வேளைகளிலும் முறையே 8, 1, 8 என்ற மணி அளவில் இந்த அமிலம் சுரக்கத் தொடங்கிவிடும். அந்தச் சரியான நேரங்களில் நாம் சாப்பிட்டு விடவேண்டும். இல்லையென்றால், இந்த அமிலம் இரைப்பைச் சுவர்களைத் தின்னத் தொடங்கும். நேரத்தோடு சாப்பிடாதவர்களுக்கு அல்சர் இந்த வழியில்தான் வருகிறது.

நாம் காரம் சாப்பிட்டாலும் புளிப்பு சாப்பிட்டாலும் அமிலம் அதிகமாகும். இன்னும் சிலருக்கு எண்ணெய் காரணமாக இருக்கும். சொல்லுங்கள், இன்றைக்குக் காரம், புளிப்பு, எண்ணெய் மிதக்காத ஒரு துரித உணவை உங்களால் கைகாட்ட முடியுமா?

இரைப்பையில் அமிலம் அதிகம் சுரப்பதற்கு அடுத்த காரணம் மனசு. ஆம்! மனசுக்கும் இரைப்பையில் இருக்கும் அமிலச் சுரப்பிகளுக்கும் நடுவில் வேகஸ் எனும் நரம்புப் பாலம் உண்டு. இதன் வழியாகத்தான் மூளையிலிருந்து அமிலம் சுரப்பதைத் தூண்டுகிற 'வேதிவீரர்கள்' இரைப்பைக்கு வந்து சேருகின்றனர். மன அழுத்தம், கவலை, கோபம், எரிச்சல், பரபரப்பு போன்ற மனசு சார்ந்த பிரச்சினைகள் நம்மை பாதிக்கும் போதெல்லாம் இரைப்பையில் அமிலம் அளவுக்கு அதிகமாகச் சுரந்து அல்சருக்கு வரவேற்பு வளையம் வைக்கும்.

அல்சருக்குப் புகையும் மதுவும் ஓர் இரட்டைக் குழல் துப்பாக்கி! இவை அமிலச் சுரப்பையும் அதிகப்படுத்தும். ஏற்கனவே அல்சர் இருந்தால் நெய் ஊற்றி ஹோமம் வளர்ப்பதைப்போல் அதைத் தீவிரப்படுத்தும். அல்சர் மாத்திரைகளையும் வேலை செய்யவிடாது.

இந்த ஆன்லைன் யுகத்தில் அமேசான் அறிமுகம் ஆன பிறகு ஆன்லைனில் மாத்திரை/மருந்து வாங்கிச் சாப்பிடுவது அதிகரித்துவிட்டது. இப்படியான சுயமருந்துவத்தில் முதலில் பாதிக்கப்படுவது இரைப்பைதான். அதிலும் குறிப்பாக ஆஸ்துமா மற்றும் மூட்டுவலிகளுக்கு தரப்படும் ஸ்டீராய்டு மாத்திரைகள், தலைவலி மாத்திரைகள், வலிநிவாரணி மாத்திரைகள் ஆகியவற்றை மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் அடிக்கடி சாப்பிடுவது அமிலச் சுரப்புக்கு ஊக்கம் கொடுக்கும்.

**கிருமியும் காரணம்**

சுகாதாரம் குறைந்தாலும் அல்சர் வரும் என்று சொன்னேன். என்ன காரணம்? 'ஹெச். பைலோரை' (HELICOBACTER PYLORI) எனும் கிருமி. இது கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா கிருமி. இது அசுத்தமான தண்ணீரில்தான் வசிக்கும். அதைக் குடிப்பவர்களுக்கு அல்லது அந்தத் தண்ணீரில் சமைத்த உணவைச் சாப்பிடுபவர்களுக்கு இது சுலபத்தில் தொற்றிக்கொள்ளும். உதாரணம், இன்றைக்கு சாலையோர உணவகங்களில் எந்த அளவுக்குத் தண்ணீர் சுத்தமாக இருக்கும் என்று உறுதி கூறமுடியாது. ஆனாலும், அங்கு சாப்பிடுவோரின் எண்ணிக்கை அதிகம். அதனால் அல்சர் பாதிப்பும் அதிகம்.


**அறிகுறிகள் என்ன?**

இந்த நோயின் தொடக்கத்தில் நெஞ்சுப் பகுதியில் எரிச்சலும் வலியும் ஏற்படும். அடிக்கடி புளித்த ஏப்பம் உண்டாகும். பசி இல்லாமல் இருக்கும். கொஞ்சமே சாப்பிட்டாலும் வயிறு நிரம்பியது போல் தெரியும். நெஞ்சில் ஏதோ பந்து வந்து அடைப்பதுபோலத் தோன்றும். இந்த உணர்வு ஏப்பம் விட்டதும் சரியாகும்.

நோயின் அடுத்தகட்டமாக வயிற்றில் வலி தோன்றும். இரைப்பையில் சுரக்கும் அமிலம் அங்குள்ள புண் மேல் படுவதால் இந்த வலி வருகிறது. அடுத்து, உணவு சாப்பிட்ட பின்பு இதே வலி உண்டாகும். இதற்குக் காரணம், உண்ட உணவு இரைப்பைப் புண்ணின் மேல் படுவது தான். சிலருக்கு இந்த வயிற்று வலி நடு முதுகுக்கும், வயிற்றின் வலது பக்கத்திற்கும் பரவலாம்.

பின் வயிற்று வலிக்கு அடுத்தபடியாக வாந்தி வரும். வாந்தியினால் நோயாளிக்கு நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. அடிக்கடி வாந்தி வந்தால் சரியாக உணவு சாப்பிட முடியாது, இதனால் உடல் எடை குறையும். உடல் மெலியும். இது தீமை. இரைப்பைப் புண் உள்ளவர்கள் வாந்தி எடுக்கும்போது, இரைப்பையில் உள்ளது எல்லாமே வெளியில் வந்துவிடுவதால் அமிலத்தின் அளவு குறைந்துவிடும். இதனால் வயிற்றுவலி தற்காலிகமாக குறையும். இது இவர்களுக்கு நன்மை. இதற்காக வயிற்றுவலியைத் தாங்க இயலாத ஒருசிலர் தாங்களாகவே வாய்க்குள் விரலை விட்டு வாந்தி எடுக்கத் தூண்டுவார்கள்.

> **சுகாதாரம் குறைந்தாலும் அல்சர் வரும் என்று சொன்னேன். என்ன காரணம்? 'ஹெச். பைலோரை' (HELICOBACTER PYLORI) எனும் கிருமி. இது கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா கிருமி. இது அசுத்தமான தண்ணீரில்தான் வசிக்கும்**



மேலும் இரைப்பையில் புண் உள்ளவர்களுக்கு உணவு சாப்பிட்டவுடன் வயிற்றுவலி அதிகமாகும்; வாந்தி எடுத்தால் வயிற்றுவலி குறையும். முன்சிறுகுடலில் புண் உள்ளவர்களுக்கு சாப்பிட்டவுடன் வயிற்றுவலி குறையும்.

**நோய் அறியும் முறைகள்**

இரைப்பைப் புண்ணை உறுதிசெய்ய 'என்டோஸ்கோப்பி பரிசோதனை' (GASTRO ENDOSCOPY) உதவுகிறது. இந்தக் கருவி மூலம் புண்ணின் சிறு பகுதியை வெட்டியெடுத்து, திசுப் பரிசோதனைக்கு (BIOPSY) அனுப்பி, புண் சாதாரணமானதா, புற்றுநோயைச் சேர்ந்ததா அல்லது ஹெச்.பைலோரி கிருமி உள்ளதா என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். குருதிப் பரிசோதனை மூலம் ஹெச்.பைலோரி கிருமிக்கு எதிரணுக்கள் (ANTIBODY) உள்ளனவா என்பதைக் கண்டறிந்தும் இக்கிருமி பாதிப்பை உறுதி செய்யலாம். மலத்தில் இந்தக் கிருமியின் புரதக்கூறு (ANTIGEN) உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்வதன் மூலமும் இந்தப் பாதிப்பை அறியலாம்.

**சிகிச்சை என்ன?**

அல்சருக்கு மருந்து சிகிச்சை முக்கியமானது. நோயின் நிலைமையைப் பொறுத்து, நான்கு வகை மருந்துகள் தரப்படுகின்றன. அதாவது, இரைப்பையில் சுரக்கின்ற அமிலத்தைச் சமப்படுத்துபவை. அமிலம் சுரப்பதைத் தடை செய்பவை. புண்ணின்மேல் அமிலம்படுவதைத் தடுப்பவை. ஹெலிக்கோ பேக்டர் பைலோரி கிருமிக்குத் தரப்படும் கூட்டுமருந்து. இவற்றோடு வயிற்றுவலியைக் குறைக்கும் மாத்திரைகள், வாந்தியை நிறுத்தும் மாத்திரைகள், இரைப்பை இயக்கத்தைச் சீராக்கும் மாத்திரைகள், மன அமைதியைத் தரும் மாத்திரைகள் என நோயாளியின் தேவைக் கேற்ப சிகிச்சை அளிக்கப்படும். இப்போதெல்லாம் அல்சருக்குத் தொடர்ந்து 6-8 வாரங்களுக்கு மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டால் நல்ல நிவாரணம் பெற முடியும்.

**தடுப்பது எப்படி?**

மாத்திரை, மருந்தோடு முறையான உணவுப் பழக்கமும் முக்கியம். நேரத்தோடு சாப்பிடுவது, அளவோடு சாப்பிடுவது, நிதானமாகச் சாப்பிடுவது, காரம், மசாலா, புளிப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பது, புகைபிடிப்பதை நிறுத்துவது, மதுவை மறப்பது, வலி நிவாரணி மாத்திரைகளை மருத்துவர் ஆலோசனையின் பேரில் மட்டுமே பயன்படுத்துவது, கோப்பி மற்றும் கோலா பானங்களை அளவோடு உபயோகிப்பது, கவலை, மன அழுத்தம், பரபரப்பு, கோபம், எரிச்சல் போன்ற உளம் சார்ந்த குறைபாடுகளைக் களைவது, தியானம், யோகாசனம் மேற்கொள்வது ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள்...

45



தர்மராசா

## அச்சுக் கைதியாக வந்த வீரசுப்ரமணியம்

களுத்துறைச் சிறைச்சாலையின் 'ஏ' வாரட்டில் நான் சிறை வைக்கப்பட்டிருந்தபோது 15.11.2001 அன்று காலை 8.30 மணியளவில் அச்சுக் கைதி ஒருவரைக் கொண்டுவந்து எனது அறைக்குள் விட்டார்கள். அவரை உற்றுப்பார்த்தபோதுதான் தெரிந்தது அவர் வேறு யாருமல்லர் எனது நண்பரான வீரா அண்ணர் என்று.

அவரது வழக்கில் குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் அவருக்கு இரண்டு வாரக் கடூழியச் சிறைத் தண்டனை நீதிமன்றால் வழங்கப்பட்ட விடயம் எனக்குத் தெரியாது. அவரை அந்தக் கோலத்தில் கண்டு அழுதுவிட்டேன். அவருக்கு 2 வாரத் தண்டனை என்று சொன்னதும் மனதுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. அரைக் கை வெள்ளை சேர்ட்டுடனும் அரைக் காற்சட்டையுடனும் அவர் நின்ற தோற்றம் மிகவும் கவலையளிப்பதாக இருந்தது.

அன்று மாலையே நான் பூசாச் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டேன். பழைய நண்பர்கள் ஓடிவந்து கட்டியணைத்துச் சுகம் விசாரித்தார்கள். எனது வழக்கின் நிலமை பற்றி விசாரித்தார்கள். நண்பர்களில் யார் யார் என்ன கேட்டார்கள் என்று கிரகிக்க முடியாமல் இருந்தது. அவர்களின் அரவணைப்பைப் பார்த்தபோது சொந்த வீட்டுக்கு வந்த உணர்வு ஏற்பட்டது.

வீரா அண்ணர் களுத்துறைச் சிறைச்சாலையில் 'சி 3' வார்ட்டில் தங்கிய முதல் நாள் இரவே அங்கு ஒரு கைதி கொல்லப்பட்டிருந்தார். அதன் பின்னர் தண்டணை விசாரணை என்ற பெயரில் 'எவ்' வார்ட்டிலிருந்து பூசாவுக்கு மாற்றப்பட்டார். சிறைக்குள் கைதிகளாக இருந்து துன்பப்பட்டவர்களுக்குப் பின்னாட்களில் ஆறுதல் கூறுவதில் மிக முக்கியமானவராக வீரா அண்ணர் காணப்பட்டார். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் கொழும்பில் மிகவும் பிரபல்யமான வர்த்தகர்களில் ஒருவர்.

துன்பப்பட்ட கைதிகளின் சோகங்களையெல்லாம் செவிமடுத்து அந்தக் கைதி என்ன ராசியில், நட்சத்திரத்தில் பிறந்தார் என்ற கேட்டு "இந்தக் காலம் உனக்குக் கஸ்ரமானதுதான் வெளியே இருந்திருந்தால் சில வேளை நீ சாகவேண்டியிருந்திருக்கும் சிறைக்குள் வந்தது நல்லது. கடவுள் இதுவரை நன்றாகத்தானே வாழ வைத்திருந்தார் கஸ்ரம் வந்துவிட்டது என்பதற்காகக் கடவுளை வெறுக்காதே" என்று ஆலோசனை கூறித் தேற்றுவார். பல கைதிகளுக்கு மனநோய் வராமல் தடுத்த சிறந்த மனோதத்துவ வைத்தியராக வீரா அண்ணர் இருந்தார். அவரது அறையில் எப்போதும் ஊதுபத்தி, சாம்பிராணி, கற்பூர வாசனை வீசும். சிறைக்குள் மாறாத கடவுள் பக்தியுடன் இருந்தவர்.

அன்றிரவு அருள் என்ற கைதியுடன் நீண்ட நேரம் கதைத்துக்கொண்டிருந்தேன். பூசாவில் ஸ்கொட் போய்வந்தால் பழைய நண்பர்கள் இருக்கும் அறைக்குள் சேரலாம் (அந்த வசதி ஏனைய சிறைகளில் இல்லை) நாம் கேட்கும் அறைக்குள் விடுவார்கள். அன்றிரவு ஓரளவு நிம்மதியாக நித்திரை கொள்ள முடிந்தது. களுத்துறைச் சிறையுடன் ஒப்பிடும்போது பூசாவில் நுளம்புத் தொல்லை குறைவு.

அந்த நாள்களில் பலர் கந்த சஷ்டி விரதம் அனுஷ்டித்தார்கள். எங்கள் சிறை அறையிலிருந்த மதன் என்ற மட்டக்களப்பு நண்பரும் ஜெகன் என்ற மல்லாவி நண்பரும் விரதம் பிடித்தார்கள். செவ்விளநீர், பால்மா பக்கற், பழங்கள் போன்றன தினச் சாப்பட்டு ரேசனில் அவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு நிர்வாகம் சம்மதித்திருந்தது. பூசாச் சிறையில் கைதிகளின் தேவைகளை ஓரளவு கேட்டறிந்து உதவுவார்கள். வேறு சிறைகளில் விரதமிருப்பதை அனுமதிக்கமாட்டார்கள். அங்கெல்லாம் வழமையான ரேசன் சாப்பாடு மட்டும்தான் பெற முடியும் என கட்டாயப்படுத்துவார்கள். பூசா சிறை நிர்வாகம் விரதத்தை மதித்து அவ்வாறு நடந்துகொண்டது.

அங்கு தமிழ் அரசியல் கைதிகள் மட்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததால் அவர்களுக்கு நிர்வாகச் சிக்கலும் இருக்கவில்லை.

(தொடரும்)

---


### அதிகம் ...

வழிகள் அல்சர் வராமல் தடுக்கும். மன நிம்மதியும், நல்ல உறக்கமும் அவசியம்.

அல்சர் உள்ளவர்கள் கவனிக்க!

- வயிறு நிறைய சாப்பிடாதீர்கள். உடல் உழைப்பு குறைந்தவர்கள் முக்கால் வயிறு சாப்பிட்டால் போதும்.
- சாப்பிட்டு மூன்று மணி நேரத்துக்குள் நொறுக்குத் தீனி சாப்பிடுவதை நிறுத்தவும்
- அசைவ உணவு சாப்பிட்டதும் குளிர்பானங்கள், கோலா பானங்கள் மற்றும் ஐஸ் குடிப்பதை தவிர்க்கவும்.
- காலை உணவைத் தவிர்க்க வேண்டாம்.
- இரவில் எளிதாகச் செரிக்கக்கூடிய உணவைச் சாப்பிடுங்கள்.
- சமைத்த உணவையும் சமைக்காத உணவையும் ஒரே நேரத்தில் சாப்பிட வேண்டாம்.
- உணவு சாப்பிட்ட உடனே பழங்களைச் சாப்பிடாதீர்கள். இடைவேளைகளில் சாப்பிடுங்கள்.
- உணவைச் சீரான இடைவெளியில் பிரித்துச் சாப்பிடுவதை வழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்!

(பேசுவோம்...)




### நடனத்திலிருந்து இயக்கம்!

பல மொழிகளில் நூற்றுக்கணக்கான திரைப் படங்களுக்கு நடன இயக்குநராகப் பணி புரிந்தவர் பிருந்தா. இவர், துல்கர் சல்மான், காஜல் அகர்வால், அதிதி ராவ் ஆகிய மூன்று நட்சத்திரங்களைக் கொண்டு 'ஹே சினாமிகா' என்கிற படத்தை இயக்கியிருக்கிறார். முக்கோணக் காதல் கதையைக் கொண்டுள்ள இப்படத்தின் ட்ரைலர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. மார்ச் 3-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவிருக்கிறது படம். மணிரத்னம் படம்போல் இருப்பதாக நெட்டிசன்கள் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்



அனேகமாக யதார்த்தம் என்பது கோட்பாடுகளையும் பகுத்தறிவோடு எந்த விதமான உறவுகளுமற்ற சம்பிரதாயங்களையும் கேள்விக்குட்படுத்துகிறது. அவற்றினை பொருத்தம் (கால மற்றும் சூழல் பொருத்தம் மற்றும் நடைமுறை) கருதி விலகிச் சிந்திக்கவும் ஒதுக்கி வைக்கவும் காரணமாகிறது. இந்த விலக்கல் மற்றும் ஒதுக்கல் சிந்தனை மற்றும் செயல்முனைப்பு என்பன காலங்காலமாக ஒரே தடத்தில் உழலும் ஒரு தொகுதியினரை எரிச்சலடையவும் அச்சமடையவும் வைத்துக்கொண்டிருக்கிறது என்பதுடன் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதையும் குழப்பியடிக்கிறது

இங்கு ஒரே தடத்தில் சுழலும் ஒரு தொகுதி என்பது அனேகமாக சுயசிந்தனையற்ற அல்லது தற்துணிவற்ற ஒரு தொகுதியாகவே உள்ளது. இத்தொகுதியானது சுமைகாவிகளாக கோட்பாடுகளையும் யதார்த்தமற்ற (நம்பிக்கை என்று பெருமைப்படும்) சடங்குவழிச் சம்பிரதாயங்களையும் ஆய்வுக்குட்படுத்தாது சுமந்து கொண்டிருக்கிறது. அதனையே பெருமையாகவும் கொண்டாடுகிறது.

இதிலுள்ள சுயசிந்தனையைச் சிறியளவில் கொண்டுள்ள உபதொகுதியானது ஏனையோரைக் கட்டுப்படுத்துகிறது. இந்த உபதொகுதியே மிக ஆபத்தானது. இவர்களே கோட்பாட்டுத் திரிப்புகளையும் சம்பிரதாய மற்றும் சடங்கு மாற்றங்களையும் உருவாக்குகிறார்கள். ஆதிகாலத்தில் அறிவியல் ரீதியாக நன்மைதரவல்ல சில பல சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பிறரை அடக்கியாள்வதற்காகவும் தம்மை வளமூட்டுதலுக்காகவும் அறிவியலுக்கப்பால் வலிந்து தடம் மாற்றுகிறார்கள்.

இந்த மாற்றங்களை காலத்துக்கேற்றபடி மாறுதல் என்பதாக விளக்குகிறார்கள். பிறர் மீது சுமத்துகிறார்கள். சுயசிந்தனையேதுமற்ற அல்லது துணிவற்ற ஒரு பெருந்தொகுதியானது சுமக்கவைக்கப்படுகிறது. அவ்வாறு சுமந்து திரிவதே பெருமைக்குரியது பண்பட்டது என்ற கருத்துருவாக்கம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

இயற்கையினது அனைத்துக் கூறுகளுக்கும் மூலாதாரமான சூரியனுக்கு நன்றி பாராட்டும் சடங்கான தைப்பொங்கல் பருவமாற்றத்தின் எல்லையான செழிப்பான ஒரு பருவத்தினது தொடக்க நாளான தைமாத முதலாவது நாளில் பொங்கிப்படைத்து கூடியுண்டு இன்புற்றிருக்கும் பண்பாடாகவே இருந்தது. தற்போது ஆலய வழிபாடாக மாற்றப்பட்டு விட்டது. இன்னும் சில ஆண்டுகளில் யாகம் என்கிற அளவிற்கு போனால்கூட ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை.

அவ்வாறானதுதான் பெண்கள் பருவமடையும் விடயமும். அடுத்தவர் அறியாது வீட்டுக்குள்ளேயிருந்த விடயம் சில சமூகங்களில் சடங்காயிருந்தது காரணத்தோடு. தேவதாசிகள், பாலியல் தொழிலாளர் குடும்பங்களில் தமது தொழிலில் புது வரவை அறிமுகம் செய்து விளம்பரமாக்க விழாவாக்கப்பட்டது. இன்று நாகரீகம் எனும் பெயரில் பெருமெடுப்பில் நடாத்தப்படுகிறது. இதில் புரோகிதனின் தீட்டுக் கழித்தல் சம்பிரதாயமும் புகுந்துவிட்டது. இந்த விடயத்தில் வருமானத்தை ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் ஒரு தொகுதியினது ஆதிக்கம் கவனத்திற்குரியது.

இவ்வாறே அனைத்து விடயங்களிலும் குறித்த விடயங்களால் நன்மையடைகிற ஒருசிறு தொகுதி குறித்த விடயங்களை எந்தளவிற்கு மாற்றியமைக்கிறது என்பதற்கான சிறு எடுத்துக்காட்டுகளே இவை. இவற்றைச் சிறு விடயங்களாகவே விட்டுவிட்டுக் கடந்துவிடுகிறோம் என்பதுதான் அந்தச் சுரண்டல் பேர்வழிகளுக்கு வாய்ப்பாகிறது என்பதை கவனிக்கத் தவறிவிடுகிறோம் என்பதே உண்மை.

ஆகமொத்தம் எந்த ஒரு விடயமும் நிறைய உழைப்பை பணத்தைச் சுரண்டிக்கொள்கிறது. அந்தளவு செலவிட்டு ஒரு காரியத்தை நடத்தும் போது நிம்மதி அணுகுமா? மனம் குழம்பாமல் என்னதான் செய்யும்? அப்படிச் செய்திருக்கலாமே? இப்படிச் செய்திருக்கலாமே? என ஒரேயிடத்தில் சலிப்புகளோடு சுற்றுவதிலிருந்து மீள முடியாது மனம் அல்லலுறுகிறது. அந்த இடத்திலிருந்து மீள்வதைப்பற்றி எண்ணுகிற ஒவ்வொரு முறையும் மீளவும் அதற்குள்ளேயே வலிந்திழுக்கப்படுகிறது என்பதை உணரத் தவறுகிறோம்.

இதுவும் இவையும்கூட உடனகற்றப்பட வேண்டிய குப்பைகளே. கடந்த தவறுகளிலிருந்து பாடங்கற்றல் என்பதை சடங்குகள் சம்பிரதாயங்கள் அனுமதிப்பதில்லை என்பதை உணர்ந்து கொள்வது அவசியமானது. அதனை உணர்ந்து கொள்வதற்காக சிந்திப்பது அவசியம். சிந்திப்போம்.

# ஏதாலும் விளங்குதோ?

கதிரேசன் காத்தவராயன்

அதிலை சந்தைப் பக்கம் போனன். அங்கை முருகேசர் மரக்கறிக் கடைக்காறனோடை ஏதோ கதைச்சுக்கொண்டு நிண்டார். மரக்கறி வியாபாரி ''நாங்கள் குடுக்க வேண்டினதுகளைக் குடுக்கிறம், உவங்கள்தான் கவனிக்கிறாங்களில்லை'' எண்டு புலம்பிக்கொண்டு நிண்டார். நான் அவைக்குக் கிட்ட வாய்ப்போனன்.

''என்னப்பா கதிரேசண்ணை... உங்கை பாருங்கோவன் மொடேர்ன்ஆட் செய்துகிடக்கு... அதைப்பற்றித்தான் கதைக்கிறம்'' எண்டு வியாபாரி காட்டினதைப் பாத்தன். உண்மையாயே நல்ல நவீன ஓவியங்கள்தான்... என்னண்டு நினைக்கிறியள்? வெத்திலைத் துப்பல்தான் வேறையென்ன? ''ம்ம்ம்... உப்பிடித் துப்புறது கூடாதெண்டல்லே சட்டம் இருக்குது. அதுகும் இப்ப கொரோனா காலம் இன்னுமல்லே பிரச்சனையாகிப் போகும்'' எண்டு முருகேசர் சொன்னார்.

வியாபாரி ஒரு சிரிப்புச் சிரிச்சார். ''இஞ்சாருங்கோ உதுகளைப் பாக்க வேண்டின ஆக்களின்ரை ஒபீசிலையும் கனபேர் நிலத்திலை படங்கீறுகிற ஆக்கள்தான். அங்கை டெங்கு பெருகுகிறதுக்கும் வழியள் கிடக்குது... எங்களைப் போட்டுக் குடையிறாங்கள்...'' எண்டு சொல்லி அங்காலையும் இஞ்சாலையும் ஒருக்காப் பாத்துக்கொண்டார்.

''றோட்டுக்கரையளிலை கொட்டிக்கிடக்கிறதுகளை அள்ளுறதுக்கும் ஆளில்லை.... கதையளும் அறிக்கையளும்தான்... உந்த வெத்திலைத் துப்பலைத் தடுக்கிற வழியில்லையெண்டோ நினைக்கிறியள்? கட்டுப்படுத்துறதிலை அக்கறையில்லை.'' எண்டு எங்களைப் பாத்தார் முருகேசர். ''உண்மைதானண்ணை'' எண்டார் வியாபாரி.

''இதுமட்டுமே உந்த றோட்டுப் போடுகிற வேலையளைப் பாருங்கோவன்... சனம் போகவர வசதிப்படுத்துறம் எண்டு எவ்வளவு அரியண்டப்படுத்துகிறாங்கள்...'' எண்டார் எங்கடை கதையளைக் கேட்டுக்கொண்டு நிண்ட ஒராள். நான் ஆளை உன்னிப்பாக் கவனிச்சன்...''அட எங்கட சிங்கத்தின்ரை சம்மந்தியல்லே...மாஸ்க் கோடை அடையாளந்தெரியேல்லை'' எண்டன் சிரிச்சார்.

''உண்மைதான் பாருங்கோ.... ஒரு இடத்திலை கிண்டுறாங்கள்... மற்ற இடத்திலை மண்ணைக் கொட்டுறாங்கள்... இன்னொரு இடத்தை கிளறுகிறாங்கள்... பெரிய பெரிய வாகனங்களை கண்ட கண்டபடி றோட்டு முழுக்க நிப்பாட்டுறாங்கள்... திருப்புறாங்கள்...அண்டைக்கும் இதுகளைப்பற்றிக் கதைச்சனாங்களல்லே?'' எண்டார் முருகேசர்.

''புட்டுக்கு மண் சுமந்த கதைதானப்பா உதுகளும்... இஞ்சையொருக்கா அங்கனையொருக்கா நினைச்ச நினைச்ச நேரங்களிலை அரையும் குறையுமா தொட்டுத் தொட்டு குறை குறையா விட்டு வைச்சிருக்கிறாங்கள்... ஒரு இடத்திலையும் ஒண்டும் முழுசாயில்லை'' எண்டார் அவர். ''உண்மைதான் பாருங்கோ... வேலையைப் பெரிசாக் காட்டுறதுக்கு உதுகும் ஒரு வழிதானே?'' எண்டன் நான்.

''உண்மைதான் காத்திகேசண்ணை கனக்கச் செய்யிறமெண்டும் கஸ்டப்பட்டுச் செய்யிறமெண்டும் காட்டவல்லே உப்பிடிச் செய்யிறாங்கள்... உப்பிடித் துண்டு துண்டாச் செய்தாத்தானே கணக்குகளும் வெளியாலை வராது... உந்த வேலையளின்ரை குறையளும் சுத்துமாத்துகளும் மறக்கிறதுக்கும் வசதியல்லே...'' எண்டார் முருகேசர்.

''உதுகளுக்குள்ளை கொஞ்சம் அவதானிச்சுப் பாத்தமெண்டால் கனக்க விசயங்கள் விளங்கும்... நாங்கள்தான் அப்பிடியில்லையே... பாக்கிறது கதைக்கிறது அவ்வளவுதான்... நாங்கள் கேள்வி கேட்டு ஏதாலும் செய்தால் குழப்பவாதியளெண்டு முத்திரைகுத்தி நோண்டுவங்கள்...'' எண்டு எங்களை ஒருக்காப் பாத்தார் அவர். வியாபாரி தலையசைச்சார். ''உண்மைதான் எங்கடை கவனக்குறைவுகளும் பயமும் தான் காரணம்... இதுகளுக்குள்ளை கனக்கக் கிடக்குது... ஏதாகிலும் விளங்கிச் செய்தால் சரி.. வரட்டே...'' எண்டுகொண்டு வந்திட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமை



## வழமையான அஜித் - விஜய் மசாலா வரிசைத் திரைப்படம்

கொலம்பியாவிலிருந்து இந்தியாவின் புதுச்சேரிக்குப் போதைப் பொருள் கடத்தப்படுகிறது. காவல் அதிகாரிகளின் உதவியுடன் இந்தியாவின் சென்னையில் பல குற்றச் சம்பவங்களைப் போதைக் கடத்தல்காரர்கள் அரங்கேற்றுகிறார்கள். இந்தக் குற்றங்களை தடுப்பதற்கான ஒரு நேர்மையான காவலராக அஜித்குமாரைச் சென்னை காவல் ஆணையர் செல்வா கண்டறிகிறார். அதன் பின் அஜித்குமார் அந்தக் கடத்தல்காரர்களைக் கட்டுப்படுத்துவதே மீதிக் கதை. வழமையான தென்னிந்திய நாயகத்தனத்தைக் கொண்டாடும் உதவாத சினிமாக் கதை என்றும் சொல்லலாம்.

மோட்டார் சைக்கிள் பந்தயக்காரர்களை வைத்து சென்னையில் குற்றங்கள் நடப்பதாக விறுவிறுப்பான காட்சி நகர்வுகளுடன் படத்தின் முதல் காட்சி விரிகிறது. மேற்கு நாடுகள் பலவற்றிலும் இருந்த சட்டன் சிலேவ்ஸ் (சாத்தானின் அடிமைகள்) என்கிற பைக் குற்றவாளிகளின் பின்னணியை சென்னைக் களத்தில் புகுத்திப் பார்த்திருக்கிறார் இயக்குநர்.

பரபரப்பான மோட்டார் பந்தயம், விசாரணை என முதல் பாதி கொஞ்சம் விறுவிறுப்புக் குறையாமல் நடக்கி றது, அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற ஆவலை ஏற்படுத்துகிறது. இது, முதல் பாதியின் குறைகளை மறைக்க உதவுகிறது.

ஆனால், இரண்டாம் பாதி அவ்வாறில்லை. சமூகத்தை நம்பாத ஒருவராக வில்லனை காட்சிப்படுத்தினாலும், அதற்காக அவர் சொல்லும் பின்புலமும், அதே பின்புலத்தால் பந்தயக்காரர்கள் ஈர்க்கப்படுவதும் நம்பகத்தன்மைக்கு அப்பாற்பட்டுள்ளன.

### பாத்திரங்கள்

அறிமுகமாகும் காட்சி தொடங்கி இறுதிக்காட்சி வரை ஒட்டுமொத்தப் படத்திலும் பேசும் வசனங்கள் தொடங்கி நடிப்பு வரை தனது மிகை நாயகத்தனத்தைத் தக்கவைத்துள்ளார் அஜித். அத்தோடு தனக்குக் கைவந்த கலையான மோட்டார் சைக்கிள் பந்தயம் போன்றவற்றில் தனது ரசிகர்களைத் திருப்திப்படுத்த கடுமையான உழைப்பை கொடுத்துள்ளார். ஆனால், அஜித் வரும் சில குடும்பப் பாங்கான காட்சிகள், அவருக்கு கச்சிதமாக அமையவில்லை. அஜித்தின் கதாபாத்திரத்துக்கு இணையான பாத்திரமாக வில்லன் கார்த்திகேயா கட்டுமஸ்தான உடல், மிரட்டல், சண்டை என அஜித்துக்கு ஈடுகொடுத்துள்ளார்.

காவல் அதிகாரியாகக் ஹியூமா குரேஷி அவ்வப்போது வந்து செல்லும் பாத்திரம் என்றாலும், அதில் தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி நன்றாக நடித்துள்ளார். அதே போல் சுமித்ரா, அச்யுத் குமார், குமார், ராஜ் அய்யப்பன் என ஒவ்வொருவரும் தங்களின் கதாபாத்திரம் அறிந்து நடித்துள்ளனர்.

### ஒளிப்பதிவு, இசை

இந்த மசாலாப் படத்துக்குப் பலம்சேர்ப்பதாகத் திலிப் சுப்புராயனின் ஸ்டன்ட் காட்சிகளும், அதைக் காட்சிப்படுத்திய நீரவ் ஷாவின் ஒளிப்பதிவும் இருக்கின்றன. இந்தியாவின் மிகப் பெரிய ஆக்ஷன் படம் என விளம்பரப்படுத்தியதை சந்தேகத்துக்கு இடமின்றி இவர்கள் இருவரும் நியாயப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு சண்டைக் காட்சியும் பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கு கொண்டுசெல்கின்றன. பின்னணி இசையில் ஜிப்ரானும், பாடல்களில் யுவன்சங்கர் ராஜாவும் கவனம் ஈர்த்துள்ளனர்.

சென்டிமென்ட் காட்சிகளும், தேவையில்லா காட்சிகளும் சில இடங்களில் சோர்வைத் தருகின்றன. படத்தின் நீளம், அதைவிட அயர்ச்சியை ஏற்படுத்துகிறது. 'சதுரங்க வேட்டை', 'தீரன் அதிகாரம் ஒன்று' போன்ற படங்களில் குற்றத்தின் தன்மையை மிக விரிவாகவும், நுட்பமாகவும் பதிவு செய்த இயக்குநர் எச்.வினோத், ஒரு ஆக்ஷன் திரைப்படத்தில், அஜித் என்ற மெகா ஸ்டாரின் ரசிகர்களை திருப்திப்படுத்த முயன்றுள்ளார் என்பது தெளிவாக தெரிகிறது. ஒட்டுமொத்த சினிமா இரசிகர்களின் மனதில் அல்லாமல், அஜித் என்ற நாயகனைக் கொண்டாடித் தீர்க்கும் ரசிகர்களின் மனதில் மட்டும் நிலைத்து நிற்கும்படியாக இந்தப் படத்தை எடுத்திருக்கிறார் எச். வினோத். ■

---

# வலிமை குடும்பப் படமும்தான்! இயக்குநர் எச்.வினோத் நேர்காணல்

நீண்ட எதிர்பார்ப்புக்குப் பின்னர் வெளியாகி இருக்கிறது அஜித் நடித்திருக்கும் வலிமை படம். இலங்கையிலும் ஒரே நேரத்தில் வெளியாகி இருக்கும் இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட வரவேற்பைப் பெறவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இந்த நிலையில் அதன் இயக்குநருடன் ஒரு சின்னச் சந்திப்பு....

கொரோனாவுக்கு முன்னால் தொடங்கப்பட்ட படம்...


ஆம் முதல், இரண்டாவது, மூன்றாவது அலைகளில் சிக்கி, தடைகளைத் தாண்டி ஒருவழியா வெளியாகி இருக்கு. அனைத்து ரசிகர்களோட ஆதரவையும் 'வலிமை'க்கு எதிர்பார்க்கிறோம்.

**'வலிமை' என்ன சொல்லுது?**

இதை ஆக்ஷன் படம்னு சொல்லுவாங்க. ஆனா, குடும்பப் படம். இன்றைக்கு குடும்பங்கள்ல என்ன பிரச்சினை முக்கியமா இருக்கு.. அந்தப் பிரச்சினைத் தொடர்ந்தா என்னென்ன சிக்கல்கள் வரும், என்பதுதான் கதை. அடிதடியைத் தாண்டி குடும்பமும அம்மா சென்டிமென்டும் முக்கியமானதா இருக்கும். இன்றைய சமூகத்துக்குத் தேவையான படம் இது. நிச்சயம் நிறைய விவாதங்களை ஏற்படுத்தும். படம் பார்க்கிற ஒவ்வொருத்தரும் அவங்க யோசிக்கிற நிலையிலயும் சரி, வாழ்க்கையிலயும் சரி, ஒரு படி பாசிட்டிவா மாறுவாங்கன்னு நம்பறேன்.

அஜித் காவல்துறை படங்கள் நிறைய பண்ணியிருக்கார். நீங்களும் 'தீரன்'ல காவல்துறை பாத்திரத்தை வேறு கோணத்தில் காட்டியிருக்கிறீர்கள். இதில எப்படி?

பொதுவா படங்கள்ல போலீஸ்னா, என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட்டுன்னு காண்பிச்சிருப்பாங்க. இதுல, வழக்கமான சினிமா போலீஸ் இல்லாம, நம்ம வீட்டுல அண்ணனோ, தம்பியோ போலீஸ்காரரா இருந்தா எப்படியிருக்கும்? அப்படி யதார்த்தமான கேரக்டர்ல அஜித் சார் வர்றார். ஜெயலலிதா முதலமைச்சரா இருந்தப்ப, ஒரு பைக் ரேஸரை நேரடியா போலீஸ் வேலையில நியமிச்சாங்க. அப்பா, இவர் நேரடி அப்பாயின் [illegible]



வெளிநாட்டு காட்சிகள், கொரோனாவால நின்னு போச்சுன்னு சொன்னாங்களே?

படத்தோட கதை சென்னையிலதான் நடக்குது. பைக் ரேஸ்ல இரண்டு முறை உலக சாம்பியன் பட்டம் பெற்ற பிரான்ஸ்காரர் ஒருத்தர், முதல்ல நடிக்கறதா இருந்தது. நாங்க மகிழ்ச்சியா விசாவுக்கு விண்ணப்பிச்சுட்டு ரெடியாகும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிமை சூடும்பப்...

தான் லாக்டவுன் அறிவிச்சாங்க. ஒரு கட்டத்துல, அந்த வெளிநாட்டு காட்சியே வேண்டாம்னு தயாரிப்பாளர்கிட்ட சொன்னேன். அவர், இல்ல அந்தக் காட்சிகளைக் கண்டிப்பாக எடுக்கணும்னு சொன்னார். பிறகு அதை ரஷ்யாவில எடுத்தோம். ஆனா, அந்த பிரான்ஸ் சாம்பியன் நடிக்கலை. ரஷ்யாவை சேர்ந்த கொலக்ஸி அப்படிங்கற சாம்பியன் நடிச்சிருக்கார். அந்த ரேஸ் காட்சிகள் மிரட்டலா இருக்கும்.

**நாயகி ஹூமா குரேஷியும் காவல்துறைதானா?**

ஆம். இந்தக் கதைக்கு வலிமையான, உடல் ரீதியா, மிகவும் பொருத்தமான ஒரு நடிகை தேவைப்பட்டாங்க. இரண்டு, மூணு நடிகைகளை தேர்வு பண்ணினோம். அதுல ஒருத்தர் ஹூமா குரேஷி. நல்ல நடிகை. இந்தக் கதைக்கு என்ன தேவையோ, அதை சரியா பண்ணியிருக்காங்க.

**இந்தி ஹீரோக்கள், தமிழ்ல வில்லனா நடிச்சுட்டு இருக்கும்போது, தெலுங்கு ஹீரோவை வில்லனாக்கி இருக்கீங்களே?**

இதுக்கு குறிப்பிட்ட காரணம்னு ஏதும் இல்லை. பொதுவா இன்னைக்கு எல்லா மொழிகள்லயும் படங்கள் ரிலீஸ் ஆகுது.. அதனால, மற்ற மொழி நடிகர்களை அழைச்சுட்டு வந்து நடிக்க வைக்கிறது வழக்கமாகி இருக்கு. அதனால கார்த்திகேயாவை நடிக்க வச்சோம். அதைத் தாண்டி, அஜித் சார் இமேஜுக்கும் உடல் அமைப்புக்கும் சவால் கொடுக்கிற ஆள் தேவை. சின்னப் பையனாகவும் இருக்கணும். அப்படித் தேடுனதுல சில பேர் லிஸ்ட்ல வந்தாங்க. அதுல சரியான சாய்ஸா, கார்த்திகேயா இருந்தார். அவர் தெலுங்கு நடிகர் மாதிரியே தெரியமாட்டார். சரியா தமிழ்க் கத்துக்கிட்டு பக்காவா பேசியிருக்கார்.

**பைக் ரேஸ் காட்சிகள் டிரைலர்ல மிரட்டுதே?**

அஜித் சாருக்கு பைக் ஓட்டறது ரொம்ப பிடிக்கும். நாள் பூரா சாப்பிடாம பைக் ஓட்டிட்டே இருக்கணும்னு சொன்னாலும் அதைச் செய்றவர் அவர். சின்ன வயசுல பைக் மெக்கானிக்கா வேலை பார்த்திருக்கார், ரேஸ்ல ஓட்டியிருக்கார். இந்தியா முழுவதும் பைக்ல சுத்தியிருக்கார். அதனால மற்ற நடிகர்களைவிட அவரால பைக்ல எக்ஸ்ட்ரா சாகசங்கள் பண்ண முடியுது. அதை இதுல பண்ணியிருக்கார்.

**சில இயக்குநர்களோட மட்டும் அஜித் தொடர்ந்து படம் பண்றாரே... முதல்ல சரண், பிறகு விஷ்ணுவர்தன், சிவா, இப்ப நீங்க?**

அது என்னன்னு எனக்கும் தெரியல. இப்ப கதை இல்ல சார்னு சொன்னாகூட, 'உங்க மேல நம்பிக்கை இருக்கு, ரெடி பண்ணிட்டு வாங்க'ன்னு நம்பிக்கையா சொல்வார். முடிவெடுக்கிறதுல அஜித் சார் ஆச்சரியமானவர். சில விஷயங்கள்ல அவரைப் பார்த்து வியந்திருக்கேன். அவரைக் கணிக்கிறது ரொம்ப கஷ்டம். முதன் முதலா நான் அஜித் சாரை சந்திச்சு சொன்ன கதை வேற. 'சதுரங்க வேட்டை'யோட நவீன வடிவமா ஒரு கதையை சொன்னேன். அது கொஞ்சம் நெகட்டிவ் கேரக்டரா இருக்கும். 'விஸ்வாசம்' நல்ல இமேஜ் தந்திருக்கு. அதனால, அந்த கதையை பிறகு பண்ணலாம். இப்ப 'பிங்க்' ரீமேக் பண்ணலாம்னு இருக்கேன், முடியுமான்னு கேட்டார். நான், 'என் படத்துல பெண்களுக்கான கேரக்டரையே அழுத்தமா எழுதினதில்ல. ஒட்டு மொத்த படமுமே அழுத்தமா இருக்கே, முடியுமான்னு தெரியல'ன்னு சொன்னேன். அந்த மீட்டிங் சக்சஸ்புல்லா முடியல. பிறகு அந்தப் படம் திரும்ப எங்கிட்டயே வந்தது.


மறுபடியும் சந்திச்சப்ப, உங்களால முடியும்னு நம்பிக்கையா சொன்னார். அந்தப் படம் நான் நினைச்சதைவிட சினிமாகாரங்க நினைச்சதைவிட, அஜித் சார் நினைச்ச மாதிரி நல்லா ஓடுச்சு. அந்த ஷூட்டிங்கில என்னோட வேலை பார்க்கிறது அவருக்கு சவுகரியமா இருந்ததால, வேற ஏதும் ஐடியா இருந்தா சொல்லுங்கன்னு சொன்னார். அப்ப சொன்னதுதான் 'வலிமை'.

**அடுத்தும் அஜித் படத்தை இயக்கறீங்க...**

ஆமா. அது கொஞ்சம் நெகட்டிவ் கேரக்டர். அதாவது முதல்ல அவர்ட்ட நான் சொன்ன கதையின் ஒரு பகுதி. ஒரே ஐடியாவுல எங்கிட்ட இரண்டு, மூணு ஸ்கிரிப்ட் இருந்தது. அதை எல்லாம் ஒண்ணாக்கி இதை புதுசா பண்றேன். நிச்சயமா வேற மாதிரி இருக்கும்.

**03**

# யாருக்காக இந்த ஒப்பந்தம்




**சம்யுக்தா**

**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கைவிடப்படுவதும் கிழித்தெறியப்படுவதும் இயல்பு. பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டு அதற்கெதிரான சிங்களப் பேரினவாதிகளின் ஓராண்டுப் போராட்டத்தின் பின் அது கிழித்தெறியப்பட்டது. டட்லி - செல்வா ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளின் பின்னர் கைவிடப்பட்டது. மேலும் இந்தியாவில் 1985இல் ராஜீவ் - லோங்கோவால் ஒப்பந்தம் எழுதப்பட்டு ஓராண்டுக்குள்ளாகவே கைவிடப்பட்டது.

இவ்வாறு ஒப்பந்தங்கள் எழுதப்படுவதும் கைவிடப்படுவதும் ஆட்சியாளருக்கொரு விளையாட்டு. அதில் பாதிக்கப்படும் மக்களுக்குத்தான் வேதனை. இப்போது இந்தப் போலித்தனமான ஒப்பந்தத்தை எவ்வாறு நம்ப முடியும்? இதை நம்பி நமது போராட்டத்தை எவ்வாறு நாம் கைவிட முடியும்? இவை பற்றிய பின்னணிகளை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆராய வேண்டும்.

இதன் பின்னணியை ஆராய்வோம். 1977 இல் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து படிப்படியாக இந்திய அரச விரோத வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. படிப்படியாக மேலைத்தேய உறவை வளர்த்துக்கொண்டது. இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக மேலைத்தேசங்களின் உறவு இலங்கையில் அமையத் தொடங்கியது. இதனால் இந்திய ஆட்சியாளர்கள் இலங்கை ஆட்சியாளர்கள் மீது சீற்றம் கொண்டனர். இலங்கை ஆட்சியாளர்களைத் தமது எண்ணத்துக்குப் பணிய வைப்பதற்கு தமிழீழப் போராளிகளைப் பகடைக் காய்களாகச் செயற்படுத்தும் நோக்குடன் இந்திய ஆட்சியாளர்கள் செயற்படத் தொடங்கினர்.

பிரச்சினைகள் மிகவும் வளர்ச்சியடைந்த கட்டத்தில் இலங்கை அரசு மேலைத்தேசங்களுடன் கைகோர்த்து இந்திய எதிர்ப்பில் தீவிரமாக நின்றது. இனவாதத்தைச் சாட்டாகக் கொண்டே ஐ.தே.க. ஆட்சியாளர் மேலைத்தேச உறவைப் பலப்படுத்தினர். இனவாதத்தைக் கொண்டே [illegible] எதிர்க்கட்சிகளும் [illegible] அரசியலை நடத்தின. இந்த வகையில் இனப்பிரச்சினையால் ஏகாதிபத்திய அரசுகள், பிராந்திய அரசுகள், கட்சிகளின் அரசியல் நலன்கள் ஆகிய அனைத்தும் செயற்பட்டன.

இந்தப் பிராந்தியத்தில் பெரிய அரசாக இருக்கும் இந்தியா தனது நோக்கு நிலையில் இருந்து ஒரு தீர்வுக்கு வரவேண்டியிருந்தது. சகல சக்திகளின் முரண்பாடுகளும் வளர்ச்சியடைந்த நிலையில், நேரடி படை நடவடிக்கையை இலங்கை மீது எடுக்கவேண்டிய ஒரு தேவைக்கு அதைத் தள்ளியது. முரண்பாடுகள் படைத்துறைப் பரிமாணத்தினாலேயே தீர்க்கப்படக்கூடியயனவாகக் காணப்பட்டன. ஆனால் ஒரு நேரடி படை நடவடிக்கையால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை அது கருத்திற் கொண்டது. பலாத்காரத்தைத் தவிர வேறு வழியால் தீர்க்கமுடியாது என்ற வகையில் தனது அசௌகரியத்தை உத்தேசித்து ஒரு மென்மையான படை நடவடிக்கையை இலங்கை மீது மேற்கொண்டது.

அதாவது "மிராஜி"னுடைய வருகையும், உணவுப் பொருள்கள் வீசியமையும் ஒரு மென்மையான படை நடவடிக்கையே. இது இலங்கையிலுள்ள ஆட்சியாளர் மத்தியிலும் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இலங்கை மண்ணில் போர் வானூர்திகளின் பிரவேசம் ஒருபுறத்தில் அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தினாலும் மறுபுறம் தமது கையாலாகாத் தனத்தையும் உணர முற்பட்டனர். மேலும் தென்னிந்தியக் கரைகளில் படைகள் குவிக்கப்பட்டன. எந்நேரமும் இந்தியா இலங்கை மீது படையெடுக்கலாம் என்ற அச்சம், இலங்கை ஆட்சியாளரிடையேயும் உலக நாடுகளிடத்திலும் காணப்பட்டது. இதன் மூலம் இந்தியா ஏகாதிபத்தியங்களின் நெஞ்சிலும் இலங்கை ஆட்சியாளர் மத்தியிலும் ஏனைய அநேகர் மத்தியிலும் ஒரு நொதியத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாக மென்மையான தனது படை நடவடிக்கையைக் கையாண்டது.

ஒரு வகையில் பலாத்காரத்தைத் தவிர வேறுவழியற்ற இலங்கை அரசியலில் இந்திய படை நடவடிக்கையானது ஏகாதிபத்தியத்தையும் சிங்கள அறிஞர்களையும் மிகக் குறைந்தளவில் எதிர்க்கட்சிகளையும் கொதிக்க வைத்தது எனக்கூறலாம்.

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org